

188781

686 Regd. No. M. 2573.

பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பாமா, லிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினாங், தென்னப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணு மூன்று

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு மூன்று மாதத்திய சஞ்சிகைகளெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால் உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம் அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணு தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறு படியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலார்க்கும் ஸௌகர்யம். வி பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணு அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாராராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி வாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுவதை யெல்லாம் ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முன்னே அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20, அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

188781

பால வித்யா

ஆனைக் காப்பக
11 MAY 1931
சென்னை-600 008

(மாதப் பத்திரிகை

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

தொகுதி II	1931வது ஏப்பிரல்மீ பிரஜோத்பத்திவரு சித்திரைமீ	பகுதி IV

ஹாஸ்யத்துணுக்குகள்.
(பிரலங்கி தொகுத்தது).

கணக்கப்பிள்ளை :—செட்டியாரையா! இன்றயதினம் வீட்டில் தகப்பனருடைய திவச தினம். இன்று நான் தண்டலுக்கு வர அசௌகரியம். பெரியமனசுசெய்து ராஜாவளிக்கவேண்டும்.

நாட்டுக்கோட்டை செட்டியார் :—ஏ! ஐயர்! உனிரோடேயிருக்கிற செட்டிமவன் தெவுஷத்தை முதல்லே அளுதூட்டு பின்னாலே செத்தவங்க தெவுஷத்தே அளுங்கறேன்!

* * * * *

புதுஷன் :—அட இழவே! பொழுது விடிந்தால் உப்பில்லை, புளியில்லை, காயில்லை, அதுயில்லை யென்ற சப்தம்தானா? இந்த இழவு எப்போ தூலையும்?

மனைவி :—பொழுது விடிந்தால் பெருக்கி, மொழுகி, பாத்திரம் தேய்ப்பதும், சமைப்பதும், போடுவதும், சமைப்பதும் தானா? இந்த இரண்டு இழவும் தொலைய எதாவது வழியிருக்கிறதா பாருங்கள்.

* * * * *

கணவன் :—ஐயோ! வாணாள் முழுவதும் ஓடியாடி வேலைசெய்து குடித்தனம் நடத்த பணம் செலவு செய்யும் கஷ்டம் எப்போது விடியும்? ஈசன் இதற்கு ஒருவழி செய்யமாட்டானா?



இல்லாள்:—[illegible]ப்படாதீர். ஒரு வழி இருக்கிறது. எனக்கு போது மான ஜீவனாம்சம் அளித்துவிட்டு தாங்கள் பின்பு சந்யாஸம் வாங் கிக்கொள்வது [illegible]

* * * * *

இங்கும் அங்கும்
(பிரஸங்கி திரட்டியது.)

ஊரில் பணமில்லை. நாடு தரித்திரம் பிடித்திருக்கிறது. லெக்மியே போய்விட்டாள் என்று கூக்குரல் ஜாஸ்தியாயிருக்கின்ற இக்காலத்தில் டிராமாக்காரர்களுக்கும், தாசி வேசிகளுக்கும் எங்கிருந்தோ பணம் குவியுதே! இது எப்படி என்று ஒரு நண்பர் பிரஸங்கியை கேட்டாராம். அதற்கு நம் பிரஸங்கி இவ்விஷயத்தை ரிசர்ச் செய்து ஒரு முடிவுக்கு வர பலமேதாவிகள் முயன்று பார்க்கவேணும். இல்லாமல் போனால் இதில் ஒன்றும் விளங்காது என்றார்.

* * * * *

பழையகால பாட்டிமார்கூட இப்போது இரண்டுவேளை காபி சாப்பிடுகிறார்களே அது என் என்றதற்கு "இது நாகரீக நர்த்தனம்" என்னும் நாடகத்தில் பானங்கள் என்ற ஓர் அங்கத்தின் ஒரு காட்சி என்று கலிகால குதர்க்க கவிராயர் எழுதியிருக்கிறார். அதைத் தவிர வேறொன்றும் இப்போது திட்டமாய்ச் சொல்லமுடியாது என்றாராம் பிரசங்கி.

* * * * *

"பெருமையடைய வழியென்ன?" என்ற ஓர் பெரிய தர்க்கம், பிரஸங்கியின் நண்பர் பலர் ஓர் கமிட்டியாய்க்கூடி யோஜனை செய்ததில் ஒருவாரம் இராப்பகலாய் இரண்டுபவுண்டு தேயிலை காலியாய் கடைசியில் "வெள்ளன உடுத்து, நண்பர் பலர் கூடி நருமணம் கமழும் சண்டுகள்பூசி, நால்வர் அறிய பயனில்லா தர்மம்செய்து (இதில் தனியாய் வந்தவனுக்கு தடியடிதான்), ஹோட்டல், பிளவர் டாக்ஸி கார் முதலியவைகளுக்கு வஞ்சனை செய்யாது செலவழித்து ஒட்டாண்டியாவதே; உலகார் அறிய பேப்பர்களில் **இன்ஸால்வெண்ட் கொடுத்தல்**" என்று பிரஸங்கி முடிவுக்கு வந்த தீர்மானம் கமிட்டியில் ஒத்துக் கொள்ளப்பட்டது என்பதை பிரஸங்கி நண்பர்களுக்கு தாழ்மையாய் தெரிவித்துக்கொள்கிறான்.

* * * * *

21. புள்ளுருவாய் மண் மேட்டின் பேருருவாய்ப்
புனலுருவாய் அனலுருவாய்க் காலாய் மற்று
மெள்ளுருவா விடைவெளியி லெண்ணில்லாத
வெவ்வுருவங் கொடுபொருது முடியாச் சூரன்
உள்ளுருவாய் வெளியுருவாய் நடிக்குமெந்தா
யுண்மையுரு நீகாட்டி யுணர்ச்சி யூட்ட
உள்ளுருவா யொளிக்கின்ற வுருவங்கண்
டுருகிப்போற் றிடவுங்கொ ளுயர்வுள் ளானே.

வேறு

22. ஊட்டுவா ரற்றபோதே உடலினைத் தருகுஞ் சேய்போல்
காட்டுவா ஞனநீதான் காத்திட மறந்தசூரன்
ஊட்டுமா லுருவநீண்ட தொத்துமா வடிவுதாங்கிக்
காட்டிஞ னந்தவேளை கண்டதே கந்தன்வேல்.

23 தாருகன் க்ரௌஞ்சன்மற்றுத் தழல்விழிச் சிங்கனேமுன்
போரினிற் ரௌத்ரமீண்ட புண்ணிய வேலுமுன்னூ
ருருட லிரண்டதாக்கிச் சுத்தமும் றுகவைத் தேவர்
பேருடல் கொள்ள மீண்டு பொருந்திடப் பெற்ரு யங்கை.

24. உடலது கூறுபட்டு முயிரழி யாதசூரன்
அடலுறு மயிலுமாதத் தாண்டலைக் கொடியுமாகித்
திடமுற விரும்பிநாளுந் திருப்பணி செய்துநிற்க
நடமிடு கந்தன்சூள் காயின னடைதலென்றே!

25. சூரனூர் சிறையில்வாழ்ந்த சுந்தரத் தேவரெல்லாம்
வீரனும் வீரபாகு வெளிவிட வெளிநின் வந்தே
தாருகா சுரனைச்செற்ற தனிவைவேற் கந்த! நின்னை
நீதார் கண்ணிலை நெழைந்துநின் றேத்தினரே!

வேறு

26. ஏம கூடத் திருந்துந் திரும்பியே
நாம மாதினை நற்கரைச் செந்திலே
சேம மேபெறு தேவர்க ளேத்திட
தாம வேற்கா தற்பர நாடினே !

வேறு

27. பன்னுரு முனைப்பதியா யடையவேண்டிப்
பழுதில்விழுத் தவங்கள்பல இயற்றி நின்ற,
என்னுரு முன்னிடமே மருவிவாழ
விமையவர்தங்கோவேறு கரியோம்பிட்ட
முன்னுளிற் றிருப்பயந்த தேவயானை,
முதிற்குலமு மகிழுறு மூதாராய
பொன்னுரு மருவிசொரி பரங்கிரிக்கண்
பொருந்தமணம் புரிந்தவந்த புண்யவானே.

28. எத்திசையு மெத்தேவு மெவையுந்தாளு
மென்னப்பா பொன்னப்பா முன்னப் பாவென்
றெத்திசையு மெத்தேவு மேத்தெடுப்ப
வெழிற்குன்றின் மணக்கோலத் தவிசி லுன்னை
பத்திமையுஞ் சத்தியமுஞ் சிறிதுமில்லாப்
பாவியே னுயினேன் பார்த்துப் பொய்யா
மித்தாணி யில்வாழ்வை யில்வாழ்வாக
எண்ணியுனை நண்ணிடுநா ளெந்த நாளே!

(தொடரும்)

ஓம் பரப்பிரும்மனே நம:

நாகலிங்க நாடான் அல்லது ஏழைகளின் ஊழியன்.

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடி"

"திருவின் செல்வி மருவிடும் மார்பன்
மருமலர்ப் பாதம் வணங்கி வாழ்த்துதுமே."

அத்தியாயம் 1.

"என்டா ராமானுஜம்! சென்ற ஒரு மாத கால மாக ஏதோ சித்தப்பிரமைகொண்டவன்போலிருக்கிறாயே. என்ன விசேஷம்?" என்று சிரித்துக்கொண்டே பால பாலகிருஷ்ணன் வினவினான்.

ஆனால் தன் நண்பனுடைய கேள்விக்கு ராமானுஜம் உடனே விடையளிக்கவில்லை. பிரகாசம் பொருந்திய அவனுடைய கண்கள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன.

நிற்க, நம் கதை நடக்குமிடமாகிய திருப்பரங்குன்ற ஊர் கல்வி, வியாபாரம், ராஜரீகம், இன்னும் மற்ற எல்லா விஷயங்களிலும் சென்னைபோன்ற பெரிய நகரங்களுடன் ஒப்பிடத்தக்கது. அதில், மாலைவேளைகளில் ஜனங்கள் காற்றுவாங்கும்பொருட்டும், சிறு குழந்தைகள் ஓடிவிளையாடும்பொருட்டும், ஆங்கிலேய பாஷையில் 'பார்க்' என்று சொல்லப்படும் அழகிய பல சோட்டங்கள் உண்டு. நம் ராமானுஜமும் பாலகிருஷ்ணனும் தற்சமயம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தது அவைகளில் ஒன்றே.

நாம் சொல்லும் சமயம் மாலை 6-மணியிருக்குமாகையால், அத்தோட்ட முழுமையும் ஜனங்கள் வரிசைவரிசையாய்க் காணப்பட்ட பெஞ்சுகளிலுட்கார்ந்துகொண்டோ, அல்லது உல்லாஸமாய் சம்பாஷித்தவண்ணம் உலாவிக்கொண்டோ, சுகமாய் வீசிக்கொண்டிருந்த மந்தமாருதத்தை அநுபவித்துக்கொண்டிருந்தனர். மலைவாயில் விழுந்தருவாயிலிருந்த ஆதித்தன் தங்கமயமான தன் கிரணங்களை வாரி அத்தோட்டத்தின்மேல் வீசியதின் பலனாய், அது அச்சமயம் தோன்றிய ஒரு அழகையும் இன்னும் அதிலிருந்த ஜனங்களுடைய குதூகலத்தையும் இங்கு வர்ணித்துக்கொண்டிருக்க நேரமில்லையாகையால் விட்டுவிடுவோம்.

ராமானுஜம் (முதலியார்) பாலகிருஷ்ணன் (செட்டியார்) இவ்விருவருக்கும் கிட்டத்தட்ட 22 வயதிருக்கலாம். அதில் பாலகிருஷ்ணனுடைய முகத்தில் ஒருவித தீர்ந்த கம்பீரமும் சுருசுருப்பும் நன்கு விளங்கின. அவன், தன் தோழனுடைய தோள்களைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம்,

"ஏண்டா! வாயில் என்ன குழக்கட்டையா? விஷயமென்ன? சொல்லு." என்று மறுபடியும் கேட்க, ராமானுஜம், புன்சிரிப்புடன்,

"டேய்! என்னை வீணாய் கேலி செய்யாதே." என்றான்.

பாலகிருஷ்ணன்:—அதெல்லாம் முடியாது. நீ உள்ளத்தைச் சொன்னலொழிய விடமாட்டேன்.

ராமானுஜம்:—நான் சொல்லமுடியாது.

பால:—டேய்! நீ ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. நீ படும் அவஸ்தைக்குக் காரணம் எனக்குத் தெரியும்.

ராமா:—தெரியுமானால் கேட்பானேன்.

பால:—அப்படியல்ல. அதை நீ உன் வாயால் சொல்ல வேண்டும்.

ராமா:—அடே! நீ மகா வாயாடியென்பது எனக்குத் தெரியும். எங்கே தெரியுமானால் சொல் பார்ப்போம்.

பால:—அப்படியா? சொல்லுகிறேன் கேள். 3 நம்பர் வீதியிலிருக்கும் டாக்டர் கேசவ முதலியாருடைய மகள் மாகதவல்லி உன்னை மயக்கிவிட்டாள். ஆஹா! அவளுடைய பெயரைக் கேட்டதுமே உன்னுடைய முகம் மலர்ந்துவிட்டதே.

ராமா:—ஆமாம்; இதை நீ எப்படி கண்டுபிடித்தாய்?

பால:—அடேயப்பா! இதைக் கண்டுபிடிப்பது மகா கஷ்டமோ? போனமாதம் மாகதவல்லி குளத்தில் முழுகும்பொழுது தவறி விழுந்து சாகுந்தருவாயில் நீ அவளைக் காப்பாற்றினையென்று கேள்விப்பட்டேன். நம்போன்ற வாலிபர்களுக்கு அழகிய பெண்களைப் பார்த்தாலேபோதும். போதாக்குறைக்கு, நீ அவளுடைய சரீரத்தைத் தொடும் பாக்கியத்தையும் அடைந்துவிட்டாய். அதுவுமன்றி, அதுமுதற்கொண்டு நீ தினந்தோறும் அவளுடைய வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறாயென்பது எனக்குத் தெரியும். எல்லாம்போக, இதுவரையில் இப்பக்கமே வராதவன், சென்ற சில நாட்களாய், மாலைவேளையில் இங்குவந்து வட்டமிடுகிறாய். அநேகமாய், ஒவ்வொரு நாளும், உன்னை மயக்கிய மாகதவல்லியும் தன் தந்தையுடன் இங்கு வருகிறாள். தற்சமயம் உன் கண்களுடைய பார்வை அவளையே ஆவலுடன் தேடிக்கொண்டிருக்கிறது. என்ன! போதுமா?

ராமா:—போதும்; போதும். பாலகிருஷ்ணா! இனி நான் விஷயத்தை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. நான் படும் அவஸ்தை தெய்வத்துக்குத்தான் தெரியும்.

பால:—அசடே! அவஸ்தைப்பட்டென்ன பிரயோஜனம்? அப்படியே அவஸ்தைப்படவேண்டியது அவசியமாயிருந்தபோதிலும், அது தெய்வத்துக்குத் தெரிந்து ஆகக்கூடியதென்ன? அதை அதற்குக் காரணமாகிய அப்பெண்மணிக்கும், அவளைத் தன்

இஷ்டப்படி விவாஹம் செய்துகொடுக்க அதிகாரமுள்ள அவளுடைய தந்தைக்குமல்லவோ தெரிவிக்கவேண்டும். சரி; இருக்கட்டும். அவளை நினைத்து அவஸ்தைப்படவாரம்பிக்குமுன், அவள் உனக்குக் கிட்ட வழியுண்டாவென்பதை கவனித்தாயோ? ஏண்டா! டாக்டர் கேசவ முதலியாருக்கு மாதம் 1000 ரூபாய் வருமானமுண்டென்று கேள்விப்படுகிறேன். இன்னும் அவருக்கு மரகதவல்லியைத் தவிர வேறு குழந்தைகளில்லையாம். அவர் அவளையே தன் உயிர்நிலையென்று தன் நண்பர்களிடம் சொல்லிக்கொள்ளுகிறார். அப்படியிருக்கும்பொழுது, அவர் அவளை உனக்கு விவாஹம் செய்துகொடுப்பாரோ? பீ. ஏ. பரீக்ஷையில் தேறியவனென்பதும் நல்ல கட்டழகனென்பதும் வாஸ்தவம். ஆனால் இக்காலத்தில் பையன்களுடைய படிப்பையும் அழகையும் நம்பி ஒருவரும் பெண் கொடுப்பதில்லை. சொத்தையே முக்கியமாய்க் கருதுகிறார்கள். உனக்குள்ள சொத்தென்ன? நான் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளாதே. நீ அவளை விவாஹம் செய்துகொண்டால், அவள் சாதாரணமாய்ப் போட்டுக்கொள்ளும் சவிக்கைத்துணிகூட உன்னால் வாங்கிக்கொடுக்கமுடியாது. ஆனால் நீ அவளைக் கண்டு மோகித்ததில் சிறிதும் பிசகில்லை. அவள்பொருட்டு ஏங்கித் துடிப்பவர் இவ்வூரில் பலருண்டு.

ராமா:—"டேய்! நிறுத்து; நிறுத்து. என்னமோ மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே போகிறாயே. பைத்தியமே! ஆனால், நான் இவைகளைப்பற்றியெல்லாம் யோசிக்கவில்லையென்று நினைக்கிறாயா? சரி; இக்காலத்தில், பையன்களுடைய படிப்பையும் அழகையும் கவனிக்கமாட்டார்களென்றும், சொத்தே முக்கியமென்றுமல்லவோ சொல்லுகிறாய்? பணம் பணம் என்று சாவது உன்னை செட்டி ஜாதியே மொழிய எங்கள் ஜாதியல்ல. அதுவும் டாக்டர் கேசவ முதலியார் அப்பேர்ப்பட்ட பேர்வழியல்ல. இவ்விஷயத்தை முதலில் விசாரித்து அறிந்துகொண்டேன். அதுமுன்றி, அவர் தன் மகளை அவளாகப் பார்த்து இஷ்டப்படும் வாலிபனுக்கே விவாஹம் செய்துகொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிந்துகொண்டேன். ஆகவே, மரகதவல்லி இப்பிணத்தைப்பற்றி என்ன அபிப்பிராயமுள்ளவள் என்பதையும், பரமதரித்திரனாகிய என்னை எக்காரணத்தைக்கொண்டாவது விவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படுவாளாவென்பதையும் கண்டறிய நிச்சயித்தேன். சென்ற சில தினங்களாக, என் தந்தைக்கு மருந்து வாங்கும் சாக்கை வைத்துக்கொண்டு, நான் அடிக்கடி அவளுடைய வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கிறேனென்பது உனக்கே தெரியும். இன்னும், அவள் நன்றாய்ப் படித்தவளென்பதும் உனக்குத் தெரிந்திருக்கலாம். அவள் நாவல்கள் வாசிப்பதில் மிகவும் பிரியமுடையவளென்பதைத் தெரிந்துகொண்டு நான் அங்கு போகும்பொழுதெல்லாம், கையில் ஒரு நல்ல நாவலை எடுத்துக்கொண்டு போவது வழக்கம். வீணாய் வளர்த்துவானேன்? வரவர, அவளுடன் சாதாரணமாய்ப் பேசும் பாக்கியத்தை யடைந்தேன். அதன் பலனாய், அவள் இப்பிணத்தைச் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லையென்பதையும், எல்லாம்போக, அவளும் என்மேல் ஆசைப்படுகிறாளென்பதையும் அவளுடைய ஜாடைகளிலிருந்து கண்டுகொண்டேன். பிறகு எது வந்தபோதிலும் சரியென்று, என்னை விவாஹம் செய்துகொள்ள அவளுக்கு இஷ்டமுண்டாவென்று அவளையே நேரில் கேட்டுவிட்டேன். ஆ—

பாலு:—என்ன? என்ன? நேரில் கேட்டாயா? ஏண்டா! உனக்கு இவ்வளவு தைர்யம் எங்கிருந்து வந்தது?

ராமா:—'ஆசை வெட்கமறியாது' என்ற வசனத்தை நீ கேட்டதில்லையோ? ஆனால் அதைப்பற்றி நினைக்கும்பொழுதி, எனக்கே ஆச்சர்யமாயிருக்கிறது.

பால:—சரி ; அவள் என்ன சொன்னாள் ?

ராமா:—அவள் சொன்னதையும், பிறகு நான் செய்ததை யும் சொல்லிக்கொண்டிருக்க இப்பொழுது நேரமில்லை. நான் அவளைப் போனமாதம் குளத்தில் காப்பாற்றி யதிலிருந்து, அவளும் என்னைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாளென்பது வெளியாயிற்று.

பால:—பேஷ் ; பேஷ். ராமானுஜம்! உன்னைப்போன்ற அதிர்ஷ்டசாலி ஒருவனுமிருக்கமாட்டான். சரி; டாக் டர் கேசவ முதலியாருடைய சமாசார மென்ன ? ஆமாம்; இது என்று நடந்தது ?

ராமா:—" நேற்று மாலை. கேசவ முதலியார் மகா வேலைக் காரர். அவர், எப்படியோ, நானும் மரகதவல்லியும் ஒருவர்மேல் மற்றொருவர் பிரியப்படுகிறோமென்ப தைக் கண்டுபிடித்துவிட்டார். எல்லாம்போக, நேற்று காலை எனக்கும் தன் மகளுக்கும் நடந்த எல்லாவற் றையும் அவர் மறைவிலிருந்து கவனித்துக்கொண் டிருந்திருக்கிறார். மரகதவல்லி என்னை மணந்து கொள்ள சம்மதிக்கவே, நான் உடனே சென்று, நடந்த விஷயத்தை என் தந்தையிடம் சொல்லி, அவரைப் போய் டாக்டர் கேசவ முதலியாருடன் இதைப்பற்றி பேசும்படி கேட்டுக்கொள்ளும்பொரு ட்டு, என் வீட்டிற்குச் சென்றபொழுது, அங்கு ஏற கனவே என் தந்தையும் கேசவ முதலியாரும் எங்களுடைய விவாஹத்தைப்பற்றி பேசிக்கொண் டிருப்பதைக் காண, நானடைந்த ஆச்சர்யத்திற்கும் சந்தோஷத்திற்குமளவில்லை.

பால:—(சிரித்துக்கொண்டே) என்டா அயோக்யப்பய லே! இதை இதுவரையில் நீ என்னிடம் சொல்ல வில்லையே.

ராமா:—அது என் குற்றமல்ல. இதை உன்னிடம் சொல்லும்பொருட்டு, இன்று காலை இரண்டுதாம் உன் வீட்டிற்கு வந்தேன். ஆனால் நீ அகப்படவில்லை.

ஆமாம் ; நான் முதல்தாம் வந்தபொழுது ஒருவர் உன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தாரே. அது யார் ?

பால:—யாரது ? அவரெப்படியிருந்தார் ? அவருக்கு வய தென்னயிருக்கும் ?

ராமா:—சுமார் 25 வயதிருக்கும். உருண்டை முகம். கல்ல உயரம்.

பால: - அதுவா ? அவர் என்னுடைய தங்கை புருஷன்.

ராமா:—ஏதோ பம்பாயில் உத்தியோகமென்று சொன்ன யே ? அவரா ?

பால:—ஆமாம்.

ராமா:—அவருக்கு சொந்த ஊர் எது ? நான் அவரை எங்கோ பார்த்தாற்போலிருக்கிறதே.

பால:—அவரும் இதே ஊர்தான். அவர் பம்பாய்க்குச் சென்று ஒரு வருஷ காலமிருக்கும். அவரும் நாம் வரசித்த அதே காலேஜில்தான் வாசித்துக்கொண்டிருந் தார்.

ராமா:—சரிதான் ; இப்பொழுது ஞாபகம் வருகிறது. ஆமாம்; அவருக்குப் பெற்றோர்கள்—

பால:—அவருடைய தாயார் இறந்து வெகுகாலமாய் விட்டது. தந்தை இதே ஊரிலிருக்கிறார்.

ராமா:—யாரது ?

பால:—அவரை உனக்கு நன்றாய்த் தெரியும். அவர் 8 நம்பர் வீதியிலிருக்கிறார்.

ராமா:—யாரது ? 8 நம்பர் வீதியில் எவ்வளவோ பேரிருக் கிறார்கள்.

பால:— வாஸ்தவம் ; நகை வியாபாரி முத்தையா செட்டி யார்—

ராமா.—என்ன ? முத்தையா செட்டியாரா ? உன் தங்கை புருஷன் அவருடைய மகனா ?

பால:— ஆமாம்.

ராமா:—என்னடா ? இது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறதே. முத்தையா செட்டியார் மிகவும் பணக்காரனென்று சொல்லிக்கொள்ளுகிறார்களே.

பால:—வாஸ்தவம்; 8 லக்ஷத்துக்கு சொத்துண்டு.

ராமா:—அப்படியானால் அவருடைய மகன் பம்பாயில் எதற்காக உத்தியோகம் செய்யவேண்டும் ?

பால:—அது ஒரு பெரும் கதை. கேட்பவர்கள் நம்ப மாட்டார்கள். சற்று நேரத்திற்குமுன் நீ பணம் பணமென்று சாவது செட்டி ஜாதி ஒன்றேயென்று சொன்னயல்லவா ? அது ரொம்ப வாஸ்தவம். முத்தையா செட்டியாருக்கு பணம் ஒன்று இருந்தால் போதும். பிள்ளை வேண்டாம் ; குட்டி வேண்டாம். அவரைப்போன்ற கருமி எங்குமகப்படமாட்டான். அப்பப்பா ! அவருடைய ஈவு இரக்கமற்ற சுபாவத்தையறியாமல் அவரிடம் பணம் கடன் வாங்கிவிட்டு இவ்வூரில் தத்தளிப்பவர்கள் பலருண்டு. ஏன் ? கோச்சு வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் போட்டடித்துக்கொண்டிருக்கும் நம்மூர் வக்கீல்மார்கள் அநேகமாய் அவரிடம் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர் நினைக்கும்பக்ஷத்தில் எல்லோரையும் ஒரு நிமிஷத்தில் சந்தியில் இழுத்துவிட முடியும். அவரிடம் கடன் வாங்கியவர்கள் மீளுவது அசாத்தியம். இவ்விதம் தன்னிடம் மாட்டிக்கொண்டவர்களைக் கெடித்தே இவ்வூரில் 6 வீடுகள் வாங்கியிருக்கிறார். அவருடைய லோபித்தனத்தையும் நீச சுபாவத்தையும் அவருடைய மகனாலேயே சகிக்கமுடியவில்லை.

ராமா:—அவருடைய பெயரென்ன ?

பால:—வாசுதேவன். அவன் இரண்டு வருஷங்களுக்குமுன் பி. ஏ. பாஸ் பண்ணியதும், டாக்டர் பரீக்ஷைக்கு வாசிக்கப் பிரியப்பட்டபொழுது முத்தையா செட்டியார், அவனுடைய படிப்பினைபொருட்டு, மேலும் சிலவழிக்க மறுத்துவிட்டார். தன் கீழையிலேயே

வேலை செய்யும்படி கொன்னார். அதிலிருந்து இரு வருக்கும் மனஸ்தாபம் ஆரம்பித்தது. கடைசியில் முத்தையா செட்டியார், தனக்கு அவன் ஒரே மகனென்பதையும் யோசிக்காமல், அவனை வீட்டைவிட்டு அடித்துத் துரத்திவிட்டார். அதற்குள் வாசுதேவனுக்கு விவாஹமாய்விட்டது. ஆகையால் ஒரு உத்தியோகத்தைப் பிடித்துக்கொள்ளும்பொருட்டு அவன் பட்டகஷ்டம் தெய்வத்திற்குத்தான் தெரியும். அவன் மிகவும் மானியாகையால், நாங்கள் பலதரம் அவனுக்கு உதவிபுரிய முன்வந்தும் மறுத்துவிட்டான். கடைசியில் தெய்வானுக்கிரகத்தினால் போனவருஷம் பம்பாயில் ஒரு வேலை கிட்டியது. இப்பொழுது தன் பிரேயசியை அழைத்துப்போகும்பொருட்டு வந்திருக்கிறான். ஆஹா ! அதோ பார். உன் காதலி மரகதவல்லியும் டாக்டர் கேசவமுதலியாரும் வருகிறார்கள்.

வாஸ்தவம். அச்சமயம், சுமார் 45 வயதுள்ள ஒருவரும், 17 வயதுள்ள ஒரு பெண்மணியும், அப்பக்கம் வந்துகொண்டிருந்தார்கள். டாக்டர் கேசவ முதலியார் மிகவும் காரீகமான உடைகளை அணிந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததுமே, அவர் நன்றாய்ப் படித்தவரென்பதையும், இன்னும் அதற்கேற்ற உதாரகுணம் வாய்ந்தவரென்பதையும், எளிதில் கண்டுகொள்ளலாம். அவர், சமீபத்தில் ராமானுஜம் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், அணிமையணுகி பிரியத்துடன்,

"நேற்று நான் உன் தந்தையுடன் பேசிய எல்லாவற்றையும் நீ தெரிந்துகொண்டிருப்பாய். உன்னையும் டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்கவைக்க ஏற்பாடு செய்யலாமென்றிருக்கிறோம். அதில் உனக்கு இஷ்டந்தானே ?" என்று வினவினார்.

ஆனால், ராமானுஜம் அவர் பேசியதைக் கவனித்த தாகவே தோன்றவில்லை. அவனுடைய கண்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மரகதவல்லியை ஆவலுடன் நோக்

யவண்ணமிருந்தன. அம்மங்கையும், அழகு, பெருந்தன்மை, நற்குணங்கள், இவைகள் ஒருங்கே பொலியப் பெற்ற தன் முகத்தைத் திருப்பி, நன்றியறிவும் காதலும் தளும்பிநின்ற தன் நேத்திரங்களின் பார்வையை தன் காதலன்மீது காட்டவே, அவன் தன்னை அவ்வளவு பிடிவாதத்துடனும் ஆவலுடனும், தன் தந்தை பேசுவதையும் கவனிக்காமல், பார்த்துக்கொண்டிருப்பதைக்கண்டதும், புன்முறுவல்செய்தவண்ணம், நாணத்துடன் தன் முகத்தைத திருப்பிக்கொண்டாள். இதை டாக்டர் கேசவ முதலியாரும் கவனிக்காமலில்லை. அவர், புன்சிரிப்புடன்,

"சரி; சௌகர்யப்பட்டால், நாளை வீட்டிற்கு வா. உன்னுடன் எனக்குக் கொஞ்சம் பேசவேண்டும்." என்று கூறிவிட்டு, அவ்வாலிபனிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அவர் போனதும், பாலகிருஷ்ணன், தன் தோழனைத் தொட்டு,

"ராமானுஜம்! உனக்கு வெட்கமில்லை. ஏண்டா! அவர் பேசியதையும் கவனிக்காமல் அப்படியா வாயைப் பிளந்துகொண்டு நிற்பது. போடா முண்டமே! நீ இவ்வளவு பைத்தியமென்று நினைக்கவில்லை. சரி; அதிருக்கட்டும். அதோ அவனை உனக்குத் தெரியுமோ?" என்று வினவிக்கொண்டே கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒருவனைச் சுட்டிக் காண்பித்தான். அவனைப் பார்த்ததும், ராமானுஜம்,

"தெரியும். ஏன் கேட்கிறாய்?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"முதலில் அவன் யாரென்பதைச் சொல்லு." என்றான்.

ராமா:—அவன் டாக்டர் கேசவ முதலியாருடைய தமக்கை மகன். நான் அவருடைய வீட்டிற்குப் போகும் பொழுதெல்லாம், அவன் மாகதவல்லியிடம் வம்பிக் காட்டிக்கொண்டு நிற்கிறான்.

பால:—பேஷ்! அப்படியா? சரி; அப்பெண்மணியை நீ விவாஹம் செய்துகொள்ளப்போகிறாயென்பது அவனுக்குத் தெரியுமோ?

ராமா:—தெரிந்திருக்கும்.

பால:—அவன் இதுவரையில் உன்னையே கவனித்துக் கொண்டிருந்தான். அதுவும், நீயும் மாகதவல்லியும் கண்வேலை செய்துகொண்டிருந்தபொழுது, அவனுடைய முகம் பயங்காமாயிருந்தது. அதில் பொறுமை, கோபம் இவ்விரண்டும் நன்கு புலப்பட்டன. அவனும் மாகதவல்லியைக் காதலிக்கிறானென்பதில் சந்தேகம் இல்லை. நீ அவனிடம் மிகவும் ஜாராய் இருக்கவேண்டும். அவன் உன்னை வேண்டுமானால் கொல்லவும் துணிவானென்று தோன்றுகிறது.

ராமா: வாஸ்தவம். அவன் மிகவும் போக்கிரி. ஆனால் அவனுடைய விஷமம் என்னிடம் நடவாதென்பது உனக்கே தெரியும். அவனை இதுவரையில் உனக்குத் தெரியாதோ?

பால:—நன்றாய்த் தெரியும். ஆனால் அவன் கேசவ முதலியாருடைய தமக்கை மகனென்பது தெரியாது.

ராமா: கேசவ முதலியாருக்கும் அவனைக் கண்டால் பிடிப்பதில்லை. இருந்தாலும், தன் தமக்கையை யுத்தேசித்து, அவனைத் தன் வீட்டிற்கு வராமல் தடுக்க வழியின்றி திணருகிறார்.

பால:—அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அவன் ஏதாகிலும் விஷமம் செய்தால் என்னிடம் சொல்லு. அவனைத் தொலைத்துவிடுகிறேன்.

* * * * *

நிற்க, டாக்டர் கேசவ முதலியாருடைய தமக்கை மகனைக் கவனிப்போம். கோவிந்தசாமி என்று பெயர் கொண்ட அவனுக்கு வயது 25 இருக்கும். அவன் மகா காமலோலனென்பதையும், இன்னும் எப்பேர்ப்பட்ட அக்ரமமான காரியத்தையும் செய்யத்துணிவானென்பதை

யும், தாம்பூலாதிகளாலும் அம்மை வடுக்களாலும் விகார மடைந்திருந்த அவனுடைய முகமே தெரிந்தது. சொல்லியது. அவன் அச்சமயம் அணிந்துகொண்டிருந்த விலையுயர்ந்த துணிமணிகளிலிருந்து வாசனை கம்மென்று வெளிக்கிளம்பி விசிக்கொண்டிருந்தது. தன் சமீபத்தில் அழகிய பெண்கள் வரும்போதெல்லாம், அவர்களை இமைமாப் புடன் பார்த்துக் கணிப்பதும், தன்னுடனிருந்த தோழனிடம் "அவள் யார்? இவள் யார்?" என்று விசாரிப்பதுமாயிருந்தான்.

கோவிந்தசாமியின் தகப்பனார் இறந்து நாம் சொல்லும் சமயம் இரண்டு மூன்று வருஷகாலமிருக்கும். அவர் உழைத்து சம்பாதித்துவைத்திருந்த சொத்தை கோவிந்தசாமி, சிறிதும் முன்பின் யோசியாமல், தன்மார்க்கர்களுடன் சேர்ந்து கண்டபடி செலவழித்துக்கொண்டிருந்தான். அவனுடைய தாயார், ஒன்றும் புரியாமல், தன் தம்பியாகிய கேசவ முதலியாரிடம், அவனுக்குப் புத்திமதி சொல்லித் திருத்தும்படி பலதரம் கேட்டுக்கொள்ள, முதலியாரும் தன்னால் முடிந்தவரையில் பிரயத்தனப்பட்டும் ஒன்றும் பிரயோஜனமில்லாமற்போய்விட்டது. ஒருசமயம், கோவிந்தசாமி, அவர் தன் நன்மையைக் கருதியே பேசுகிறாரென்பதை சிறிதும் உணராமல், அவரைக் கண்டபடி உதாசினமாய்ப் பேசவே, அதுமுதற்கொண்டு கேசவ முதலியார் அவனுடன் சரிவரப் பேசுவதையே நிறுத்திவிட்டார். ஆனால் கோவிந்தசாமியின் வீடும் கேசவ முதலியாருடைய வீட்டிற்கு அருகாமையிலிருந்ததால், அவன் அடிக்கடி அவருடைய வீட்டிற்குப் போவதும் வருவதுமாயிருந்தான். அவனும் மாகதவல்லியின்மீது மோகங்கொண்டு, எப்படியாகிலும் அவளை விவாஹம் செய்துகொள்ள நிச்சயித்திருந்தான். ஆனால், அதில் அப்பெண்மணியாவது கேசவ முதலியாராவது எள்ளளவும் இஷ்டப்பட்டதாகத் தோன்றவில்லை.

நிற்க, அச்சமயம் கோவிந்தசாமியுடன் இருந்த அவனுடைய தோழனைக் கவனிப்போம். அவனுக்கும்

சுமார் 24, 25 வயதிருக்கும். அவனைப் பார்த்ததுமே அவன் பிராமணஜாதியைச் சேர்ந்தவனென்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். கிட்டு என்ற அவன், சாதாரணமாய் கோவிந்தசாமியின் இனத்தைச் சேர்ந்தவர்களுடன் கூடி, அவர்களுடைய தர்க்கிருத்தியங்களுக்கு சாதகமாயிருந்து, அவர்களுடைய பணத்தைப் பறித்துத் தின்பதையே வேலையாகக்கொண்ட லெட்சமற்ற அயோக்கியர்களில் ஒருவனென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவன் கோவிந்தசாமிக்கு தாம்பூலம் மடித்துக் கொடுத்துக்கொண்டே, அவன் கேட்கும் கேள்விகளுக்குத் தக்கபடி விடையளித்தவண்ணமிருந்தான். நடுவில் கோவிந்தசாமி,

"ஏங்காணும் ஐயரே! இன்று மாணிக்கத்தின் வீட்டில் ஆட்டம் உண்டோ?" என்று வினவினான்.

கிட்டு:—இல்லாமலென்ன? அதுவும் இன்று ஆட்டம் கனகேஜாக்காயிருக்கும்.

கோவி:—என்? என்ன விசேஷம்?

கிட்டு:—இன்று மைனர் கல்யாணராமய்யரும் வரப் போகிறார்.

கோவி:—பேஷ்! அப்படியா? ஏங்காணும்! அவருக்கு ஆடவே தெரியாதாமே.

கிட்டு: வாஸ்தவமான விஷயம். அவர் சும்மா மாணிக்கத்தின் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு ஆனந்தப்படும் பொருட்டு வருகிறார். அவருக்கு கையில் கல்லு சீட்டு வந்தாலும் ஆடத்தெரியாது. ஏன்? முந்தாநாள் வக்கீல் பஞ்சாபகேசய்யர் வீட்டில் ஆட்டம் நடந்த பொழுது அந்த மனுஷ்யனுடைய ஆட்டதீனதைக் கவனித்தேன். ஆஸ் ஜோடியை முதல்கையிலேயே பயன்படுத்திக்கொண்டு எறிந்துவிடுகிறார். பிறகு, ராணி ஜாக்கி பத்தை வைத்துக்கொண்டு 10 ரூபாய் வரையில் கூட்டுகிறார்.

கோவி:—அப்படியா சமாசாரம்? ஆனால் நான் நேற்றுத் தோத்த 300 ரூபாயை இன்று அடித்துவிடலாமென்று சொல்லுகிறீர்.

கிட்டு:—அதில் சந்தேகமே இல்லை. நீர்மட்டும் என்னையே பார்த்துக்கொண்டிரும்.

கோவி: ஆமாம்; கையில் பணமே இல்லையே, எப்படி ஆட்டத்திற்கென்று போனால் கையில் குறைந்தது 50 ரூபாயாவது வேண்டாமா?

கிட்டு:—அதற்கென்ன? செட்டியாரைப் போய் பார்த்தாலாய்விட்டது.

கோவி: அவர் ஊரில் இருக்கிறாரோ?

கிட்டு:—இல்லாமல் அவனுக்கும் எனக்கும் போக்கிடமெங்கே? இன்று காலமேகூடப் பார்த்தேன்.

கோவி:—சரி; போகும்பொழுது அவனைப் பார்த்துக் கொண்டு போவோம். (என்று சொல்லிக்கொண்டே, தன் வலது கையை நீட்டினான்.)

கிட்டு:—(அந்த ஜாடையை அறிந்து, தன் இடுப்பிலிருந்து ஒரு அழகிய வெள்ளி டப்பியை எடுத்து, அதிலிருந்த வாஸனைப் புகையிலையில் சிறிதளவு அக்கையில் வைத்து விட்டு) ஆமாம்; மறந்துவிட்டேனே. ஏன் மைனர் வாள்! உங்களுடைய மாமன் மகள் மரகதவல்லிக்கு விவாஹம் நிச்சயமாய்விட்டதாமே?

கோவி:—நிச்சயமாவது. பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆமாம்; பையன் யார் தெரியுமோ உமக்கு? (என்று மறுபடியும் தன் இடது கையை நீட்ட, கிட்டு மற்றொரு டப்பியை எடுத்து அதைத் திறந்துகாட்டவே, கோவிந்தசாமி அதிலிருந்த பொடியில் ஒரு சிமிட்டாவை அட்டஹாஸமாய் தன் நாசித்துவாரங்களில் செலுத்திக்கொண்டான்.)

கிட்டு:—யாரது பையன்? எனக்குத் தெரியாது.

கோவி: அதான்காணும். அந்தப் பைத்தியம் கடேச முதலியாருடைய மகன் ராமானுஜம். அவன் அதோ நிற்கிறான் பாரும்.

கிட்டு:—ஓஹோ! அப்படியா? அவன் சுத்த வாட்சையாச்சே?

கோவி:—வாட்சையோ கிராட்சையோ. அவன் அவனே விவாஹம் செய்துகொள்ளுவது முடியாத காரியம்.

கிட்டு:—ஏன்?

கோவி:—என்ன ஐயா! தெரியாதுபோல் பேசுகிறீமே. அந்தக் குட்டியின்மேல் நானும் கண் வைத்திருக்கிறேன். கோவிந்தசாமிக்குப் போட்டியாய் வர இந்த மண்டுவால் முடியுமா?

அத்தியாயம் 2.

பாலகிருஷ்ணனுடைய தங்கை புருஷனாகிய வாசுதேவன் நகை வியாபாரி முத்தையா செட்டியாருடைய ஒரே புதல்வனென்பது நம் நேயர்களறிந்த விஷயம். வாசுதேவனுக்கு சுமார் 24 வயதிருக்கும். அவன் தன் படிப்பிற்கேற்ற உதாரகுணங்களும் நன்நடக்கையும் வாய்ந்தவன். தன் தந்தையைப்போல் உலகில் பணமே பிரதானமென்று எண்ணங்கொள்ளாமல், பிறர் கஷ்டப் படுங்கால், தன்னாலியன்றவரையில் அவர்களுக்கு உதவிபுரியும் தர்மசிந்தனை உள்ளவன். ஆகவே, உலோபித்தனமே அவதாரம் போலிருந்த முத்தையர் செட்டியாருடைய ஈவு இரக்கமற்ற சுபாவத்தை அவன் வெறுத்தது வியக்கத்தக்கதல்ல. நாம் சொல்லும் சமயம் அவனுடைய தாயார் இறந்து 10 வருஷகாலமிருக்கும். மகா உத்தமியாகிய அம்மாதுசிரோமணி, தான் இறக்குந்தருவாயில், தன் ஏக புத்திரனை அழைத்து, அவனுக்குப் பல புத்திமதிகளைச் சொன்னதுமன்றி,

"என் கண்மணியே! உன்னை விட்டு நான் எப்படியடா இறப்பேன்? ஐயோ! உன் தந்தை பணம் பணமென்று சாகும் பாபியாயிற்றே. அப்பா! நீயாவது அவரைப்போல் இப்பாழும் பணத்தின்பொருட்டு எல்லோரையும் விரோதித்துக்கொள்ளாமலிரு. பணம் வரும். பத்து ஜனங்கள், ஒரு தரம் விரோதித்துக்கொண்டுவிட்டால், மறுபடியும் வரமாட்டார்கள். ஆகவே, எல்லோருடைய மரியாதைக்கும் அன்புக்கும் பாத்திரனாக்கிக்கொள். என் செல்வமே! நான் இறந்த பிறகு உன் தந்தை உன்னை சரிவர கவனிக்கமாட்டானென்பது எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் நீ அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியம்." என்று கூறிவிட்டு இறந்தாள்.

அவ்வுத்தமி "நான் இறந்த பிறகு உன் தந்தை உன்னை சரிவர கவனிக்கமாட்டார்." என்று கூறியது தவறல்ல. அவளுடைய காலமானதும முத்தையா செட்டியார், தனக்கு அவன் மகனென்பதையே மறந்தவர்போல், வாசுதேவனைக் கண்டபடி திட்டுவதும் தன்னால் முடிந்தவரையில் ஹிம்சிப்பதுமாயிருந்தார். ஆனால் வாசுதேவன், தன் தாயார் "ஆனாலும் நீ அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியம்." என்று கூறியதை மனதில் வைத்துக்கொண்டு, மிகவும் மெச்சத்தக்கவிதம் நடந்துவந்தும், ஒன்றும் பிரயோஜனமில்லாமற்போய்விட்டது. கடைசியில், பல கார்யங்களை உத்தேசித்து, முத்தையா செட்டியார், தன் மகனுடைய விவாஹத்தை முடித்துவைத்தார். விவாஹமான அதே வருஷம் வாசுதேவன், பீ. ஏ. பரீக்ஷையில் தேறவே, மேலும் டாக்டர் பரீக்ஷைக்கு வாசிக்கப் பிரியப்பட்டு, தன் எண்ணத்தை செட்டியாரிடம் வெளியிட்டபொழுது, அவர், படிப்பின் பொருட்டு மேலும் பணத்தைச் செலவழிக்க மறுத்து, தனக்குதவியாக தன் வியாபாரத்தையே கைக்கொள்ளும்படி வற்புறுத்தினர். ஆதியிலிருந்தே வாசுதேவனுக்கு செட்டியாருடைய வியாபாரத்தில் நடக்கும் அக்ரமங்களும் அநியாயங்களும் தெரியுமாதலால், அவன் அதற்கு

இணங்கவில்லை. அதன்பலனாய், இருவருக்கும் வாக்குவாதம் உண்டாக, செட்டியார், அவனை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி, தன் வீட்டைவிட்டு அடித்துத் துறத்திவிட்டார். பிறகு, தான் மேலும் படிப்பது முடியாத கார்யமென நினைத்து, அவ்வாலிபன் ஒரு வருஷகாலம் வரையில் ஒரு உத்தியோகத்தைப் பிடித்துக்கொள்ளும்பொருட்டு பட்டகஷ்டம் ஈசுவரனுக்குத்தான் தெரியும். அவ்வொரு வருஷத்திற்குள் அவன் பலரிடம் கிட்டத்தட்ட 500 ரூபாய் வரையில் கடன் வாங்க சேரிட்டது. கடைசியில், அச்சமயம் பம்பாயில் நல்ல உத்தியோகத்திலிருந்த ஒரு நண்பனுடைய சகாயத்தால், அவ்வூரில் ஒரு வேலை கிட்டவே, கூடிய சீக்கிரம் தன் மனைவியை தன்னிடம் அழைத்துக்கொள்ளும் எண்ணத்துடன் சென்றவன், வேலையில் அமர்ந்த ஒரு வருஷத்திற்குள் லீவு கிடைக்காததால், ஒரு வருஷம் முடிந்ததும், தன் மனைவியை அழைத்துப்போகும் பொருட்டு கிரிபுரம் வந்துசேர்ந்தான்.

நிற்க, அவனுடைய மனைவியின் குடும்பத்தைக் கவனிப்போம். அப்பெண்மணி நம் பாலகிருஷ்ணனுடைய தங்கையென்பதை முன்னமே கூறிவிட்டோம். பாலகிருஷ்ணனுடைய தந்தை கோபால செட்டியாருக்கு அவ்வூரில் பெரிய மளிகை வியாபாரம். அவர் பெருந்தன்மையும் தயாளகுணமும் வாய்ந்தவர். அதுவுமன்றி, அவர் நன்றாய்ப் படித்தவராகையால், பொதுஜன நன்மைக்காக மிகவும் பாடுபட்டு, தன் பணத்தாலும் சரீரத்தாலும் உழைத்துவந்தார். எல்லாம்போக, அவருக்கு தன் புதல்வன் பாலகிருஷ்ணனை நன்றாய்ப் படிக்கவைக்க வேண்டுமென்ற அபேக்ஷை மிகவுமுண்டு. சாதாரணமாய், செட்டி ஜாதியில் பிறந்த பிள்ளைகளுக்கு படிப்பு நன்றாய் வருவதில்லையென்று சொல்லுவது வழக்கம். ஆனால் நம் பாலகிருஷ்ணன் அப்படியில்லாமல், ஆதியிலிருந்தே படிப்பில் நல்ல சுருசுருப்பும் ஊக்கமுமுள்ளவனாயிருந்தான். கோபால செட்டியார், தனக்கு நகை வியாபாரி முத்தையா செட்டியாருடைய மனைவி நெருங்கிய பந்துவாகையால்,

அம்மாது இறந்ததும், முத்தையா செட்டியார் தன் புதல்வாசுதேவனைப் படுத்தியபாட்டைக்கண்டு சகிக்காமலும், அவ்வாலிபன் கூடியசீக்கிரம் நல்ல ஸ்திதிக்கு வருவானென்பதையறிந்தும், அவனுக்குத் தன் பெண்ணை விவாஹம் செய்துகொடுத்தார். பிறகு முத்தையா செட்டியார், தன் மகனை நாம் சொன்னவிதம் அவமானப்படுத்தி, சிறிதும் ஈவு இரக்கமின்றி, தன் வீட்டைவிட்டுத் துறத்தியதும், கோபால செட்டியார் அவனை மேலும் அவனிஷ்டப்படி படிக்கவைக்கவும், இன்னும் வேண்டிய இதர உதவிகளைச் செய்யவும் தயாராயிருந்தபோதிலும் மிகவும் மானியாகிய அவ்வுத்தம வாலிபன், அவரை சிரமப்படுத்த சம்மதிக்கவில்லை.

இனி நம் கதையைக் கவனிப்போம்.

முதல் அத்தியாயத்தில் கூறப்பட்ட அதேதினம் இரவு 7 மணி இருக்கும்.

வாசுதேவன் கோபால செட்டியார் வீட்டில் ஒரு அறையில் சிந்தனையிலாழ்ந்தவனாய் உட்கார்ந்துகொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே வந்த கோபால செட்டியார், அவனுடைய முகவாட்டத்தைக் கண்டதும்,

"என்னப்பா! என்ன விசேஷம்? எதைப்பற்றி கவலைப்படுகிறாய்?" என்று பிரியத்துடன் வினவ, வாசுதேவன்,

"ஒன்றுமில்லை. என் தந்தையைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன். அவர் என்மீது சிறிதும் பிரியமில்லாமலிருந்தபோதிலும் நான் அவரைப் பார்க்க எவ்வளவு ஆவலுடனிருக்கிறேனென்பது தெய்வத்துக்குத்தான் தெரியும்." என்று விடையளித்தான்.

"வாஸ்தவம். எப்படியிருந்தபோதிலும் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் விடாது. குசாலாய்ப் போய்ப் பார்த்துவிட்டுவா. ஆனால்—" என்று கோபால செட்டியார் இழுக்கவே, வாசுதேவன், மரியாதையுடன்,

"நீங்கள் தயங்குவதின் காரணம் எனக்குத் தெரியும். என்னைப் பார்த்ததும் அவர் கோபிப்பாரென்றும், அதனலனுய் சண்டையுண்டாகுமென்றும் பயப்படுகிறீர்கள். வாஸ்தவம். அவர் என்னைக் கண்டதும் சீறி விழுவார். ஆனாலும் இவ்வளவு காலம் கழித்து வந்துவிட்டு, அவரைப் பார்க்காமலிருக்க என் மனம் இடந்தரவில்லை. ஆனால், அப்படியே அவர் என்னை ஏளனமாய்ப் பேசிய போதிலும், நான் வீண்சண்டை வராமல் பார்த்துக் கொள்ளுவேன் என்பது நிச்சயம்." என்றான்.

கோபால:—அப்பா! உன் புத்திசாலித்தனத்தையும் பொறுமையையும் சந்தேகிக்கவில்லை. உன் தந்தையின் முன்கோபத்தையும் முரட்டு சுபாவத்தையும் நான் நன்கறிவேனுகையால் பயப்படுகிறேன். அவர் உன்னைக் கண்டதும், நீ ஏதோ அவரிடமிருந்து பணத்தை எதிர்பார்த்து வந்ததாக நினைத்து, திட்டவாரம்பிப்பார்.

வாசு:—ஆனால் நான் அவரிடமிருந்து பணத்தை எதிர் பார்க்கிறேன் என்பதும் வாஸ்தவம்.

கோபால:—என்ன? வாஸ்தவமா? அப்பா! இப்பொழுதே சொல்லுகிறேன். நீ அவரைப் பணம் கேட்பாயாகில் கண்டிப்பாய் வம்பு வரும். அதிருக்கட்டும். உனக்கு இப்பொழுது பணம் எதற்காக வேண்டும்? உனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நான் தருகிறேன்.

வாசு:—நீங்கள் தருவீர்களென்பது எனக்குத் தெரியும். ஆனாலும், உங்களை சிரமப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. நான் உங்களுடைய மகளை விவாஹம் செய்துகொண்டு, இவ்வளவு காலமாய் அவளை என்னிடம் அழைத்துக்கொள்ள வழியின்றி, உங்களிடம் விட்டுவைத்தது ஒன்றுபோதாதா?

கோபால:—அசடே! அசடே! என் மகளுக்கு என் வீட்டிலிருக்க பாத்தியமில்லையோ? இன்னும் உன்னு

டைய ஸ்திதி இப்படியே இருந்துவிடுமோ? நீ படிக்காதவனு? அல்லது சாமர்த்தியமற்றவனு? பைத்தியமே! தானே நல்லகாலம் வந்தால் எல்லாம் சரியாய்ப்போய்விடுகிறது. நீ உன்னுடைய மனைவியை விவாஹமானதும் உடனே அழைத்துக்கொண்டு போகவில்லையென்று நான் வருத்தப்படுகிறேனென்று நினைக்கிறாயோ? இல்லாவிட்டால் நீ இப்பொழுது கொஞ்சம் தரித்ர நிலைமையிலிருக்கிறாயென்ற காரணத்தால், எனக்கு உன்னிடமுள்ள மதிப்பும் பிரியமும் குறைந்துவிடுமென்று பயப்படுகிறாயோ? அப்பா! நான் என் மகளை உனக்கு விவாஹம் செய்து கொடுத்ததற்குக் காரணம், உனக்கு உன் தந்தையின் சொத்து முழுமையும் வருமென்று எதிர்பார்த்தல்லவென்பது உனக்கே தெரியும். நான் உன் தந்தையையும் அவருடைய பணத்தையும் கணக்கில் சேர்க்கவேயில்லை. உன் படிப்பையும் நற்குணங்களையும் உத்தேசித்தேனேயொழிய வேறல்ல. சரி; இப்பொழுது உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்.

வாசு:—குறைந்தது 750 ரூபாயாவது வேண்டும்.

கோபால:—இவ்வளவு பெருந் தொகைக்கு இப்பொழுது என்ன செலவு?

வாசு:—நான் பம்பாய்க்குப் போகுமுன் வேலையின்றி ஒரு வருஷகாலமிருந்தேனென்பது உங்களுக்கே தெரியும். அச்சமயம் நான் பலரிடம் சுமார் 500 ரூபாய் கடன் வாங்க நேரிட்டது. இன்னும் இப்பொழுது நானும் என் மனைவியும் பம்பாய் போய்ச்சேரவும், அங்கு போனதும் குடித்தனம் கட்டவும் குறைந்தது 250 ரூபாய் வேண்டும்.

கோபால:—உன் தந்தை தற்சமயம் இவ்வளவு பெருந் தொகை கொடுத்து உதவி செய்வாரென்று நம்புகிறாயா?

வாசு:—நான் அவரிடமிருந்து உதவியை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு இப்பொழுதுள்ள சொத்து

அநேகமாய் அவராலேயே சம்பாதிக்கப்பட்டதென்பது வாஸ்தவம். ஆனால் அவர் இப்பொழுதிருக்கும் வீடானது என் பாட்டனாரால் வைக்கப்பட்டது. ஆகவே, அதில் எனக்கும் பாகமில்லாமலிருக்கமுடியாது. நான் போனமாதம் இதைப்பற்றி அவருக்குக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் அவ்வீடு 4000 ரூபாய் பொருமென்றும், அதில் எனக்கு 2000 ரூபாய் உண்டென்றும், நான் இப்பக்கம் வரும் பொழுது அதைப்பற்றி நேரில் பேசிக்கொள்ளுவது நலமென்றும் பதிலெழுதினார்.

கோபால:—சரி; அது எப்படியிருந்தபோதிலும், நீ அவருடன் பேசும்பொழுது மிகவும் உஜாராயிருக்கவேண்டும். அவர் கடபுடலாய் கூச்சலிட்டபோதிலும் நீ தாழ்மையாய்ப் பேசு. இந்தப் பணத்திற்காக அவருடன் சண்டையிடாதே. உனக்கு தற்சமயம் எவ்வளவு வேண்டுமானாலும் நான் கொடுக்கிறேன்.

வாசு:—அதைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். சரி; நான் போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். (என்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.)

அவன் போனதும், கோபால செட்டியார் "என்ன அநியாயம்? இப்படி தன் ஒரே மகனை அடித்துத் துறத்திவிட்டு இப்பாபி (முத்தையா செட்டியார்) யாருக்காக இப்படி விழுந்துவிழுந்து பணம் சேர்க்கிறானோ தெரியவில்லை. வாசுதேவனைக் கண்டதும், அவன் ஆவேசம்கொண்டவன்போல் குதிப்பானென்பது நிச்சயம். அவன் நியாயத்துக்கு சிறிதும் கட்டுப்படமாட்டான். ஆனால் இதில் நான் கவலைப்பட்டென்ன பிரயோஜனம்? இதில் நான் தலையிடுவது பிசகு." என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவருடைய புதல்வன் பூலகிருஷ்ணன் அங்கு வந்துசேர்ந்தான். பிறகு இருவரும் பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்

டிருந்தார்கள். இவ்விதம் சுமார் இரண்டு மணி நேரம் கழிந்தது. அதன் முடிவில் பாலகிருஷ்ணன்,

"எனக்கு ஏன்னமோ கவலையாயிருக்கிறது. வாசுதேவன் சென்று 2 மணி சாவகாசமாய்விட்டது. அங்கு இருவருக்கும் ஏதோ சண்டை நடக்கிறதென்பது நிச்சயம்." என்றான்.

கோபால:—அதெல்லாம் அப்படியொன்றும் இருக்காது. வாசுதேவன் மிகவும் புத்திசாலி. இன்னும் நான் அவனுக்கு சொல்லியனுப்பியிருக்கிறேன்.

பால:—அவன்மட்டும் புத்திசாலியாயிருந்தென்ன பிரயோஜனம்? அதுவும் அவன் பணத்தைப்பற்றிப் பேசும்பொருட்டு போயிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். பணம் என்ற வார்த்தையைக் கேட்டதும், முத்தையா செட்டியார் தன்னையே மறந்துவிடுவார்.

கோபால:—வாஸ்தவம். ஆனால் அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? இதில் நாம் தலையிடுவது பிசகு.

பால:—நியாயமே. இருந்தாலும் அங்கு என்ன நடக்கிறதென்று நம்மில் ஒருவர் சென்று பார்க்கலாமென்று நினைக்கிறேன்.

கோபால:—அப்படியல்ல. நம்மைக் கண்டதும் முத்தையா செட்டியார், நாம் மாப்பிள்ளையின்பொருட்டு கூழியாட வந்துவிட்டதாக நினைத்து, கண்டபடி பேசவாரம்பிப்பார். வீணாய் அவமானப்பட எனக்கிஷ்டமில்லை.

பிறகு, தந்தையும் புதல்வனும் மேலும் அரைமணி நேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியில் கோபால செட்டியார், தனக்கு உடம்பு சரியாயில்லையென்றும், தான்போய் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்ளுவதாகவும் சொல்லிவிட்டுப் போய்விட்டார். பாலகிருஷ்ணன் தனிமையில் வாசுதேவனை சிரஞ்சீவித்தவண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்தான். வரவர அவனுடைய மனதில்

பலவித சந்தேகங்களும் கவலையும் தோன்றலுற்றன. கடைசியில் மணி 12-க்கு மேலாயும் வாசுதேவன் வராததால், தன்னிடத்தை விட்டெழுந்து, சிந்தனையுடன் மேலும் கீழும் உலாவுவாரம்பித்தான். "சரி; இது விபரீதமாய் முடியுமென்பதில் சந்தேகமில்லை.—" என்று அவன் மேலே யோஜிக்குமுன், வெளிவாசற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்க, ஆவலுடன் ஓடி கதவைத் திறந்தவன், வந்தது வாசுதேவனென்பதைக் கண்டு, 'அப்பாடா!' என்று ஒருதரம் பெருமூச்செறிந்தான். பிறகு, கதவை மறுபடியும் தாளிட்டுவிட்டு, வாசுதேவனை பின்தொடர்ந்து சென்றான். ஆனால் கல்ல வெளிச்சத்தில் வாசுதேவனுடைய முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டான். அது கவலையினாலோ கோபத்தினாலோ அல்லது எக்காரணத்தாலோ விகாரமடைந்திருந்ததுமன்றி, அவனுடைய நெற்றியில் காணப்பட்ட ஒரு பெரும் காயத்திலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் பாலகிருஷ்ணன் திகைப்புற்று சொல்லொணா கவலையுடன் அதற்குக் காரணம் கேட்க, வாசுதேவன், பேச இஷ்டப்படாதவன் போல் முகத்தை சுளுக்கிக்கொண்டு,

"ஒன்றுமில்லை. வரும்பொழுது தடுக்கி விழுந்துவிட்டேன். வீண் சந்தடி செய்யாதே. எனக்கு மிகவும் சிரமமாயிருப்பதால் போய் படுத்துக்கொள்ளுகிறேன். நீ சாப்பிட்டாய்விட்டதோ?" என்று வினவினான். பாலகிருஷ்ணன்,

"இல்லை. உனக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன்." என்று விடையளிக்கவே, வாசுதேவன்,

"அப்படியா! நீ போய் சாப்பிடு. நான் சாப்பிட்டாய்விட்டது." என்று கூறிக்கொண்டே, பாலகிருஷ்ணன் மேலே பேசுமுன், மடமடவென்று தன் அறையை நோக்கி நடந்தான்.

"சரி; இதில் ஏதோ விசேஷமிருக்கவேண்டும். ஆனால், இப்பொழுது நான் இவனுடன் பேசுவது முடி-

யாத கார்யம். தானே எல்லாம் காலையில் வெளியாகும்.'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, பாலகிருஷ்ணன் சென்று தன் போஜனத்தை முடித்துக்கொண்டு தன்னறைக்குப் போய்விட்டான். அவன் தன் மனதை எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அவனுடைய சுவலை குறையவில்லை. சாதாரணமாகவே அவன் மிகவும் ஊகமுள்ளவனுகையால், வாசுதேவனுக்கும் முத்தையா செட்டியாருக்கும் பெரும் சண்டை நடந்து, அதில் வாய்ப்பேச்சுடன் நிற்காமல் அடிதடியும் நடந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்தான். தன் படுக்கையில் புறண்டவண்ணமிருந்தான். கடைசியில் பொழுதுவிடிந்ததும், அவன் வாசுதேவனுடைய அறைக்கு ஆவலுடன் சென்றபொழுது, அங்கு அவனுடைய தங்கை கவலையுடன் தன் புருஷனுடைய பக்கத்திலுட்கார்ந்து கொண்டிருப்பதைக்கண்டு, ஏதோ கேட்கும்பொருட்டு தன் வாயைத் திறந்தான். ஆனல் அப்பெண்மணி அவனைப் பேசாமலிருக்கும்படி ஜாடை செய்தவண்ணம், தன்னிடத்தைவிட்டு எழுந்து, அவனை வெளியே அழைத்துச் சென்று,

'' இரவு முழுமையும் நல்ல ஜுரம் அடித்தது. கண்டபடி புலம்பிக்கொண்டிருந்தார். இப்பொழுதுதான் கொஞ்சம் அயர்ந்து தூங்குகிறார்.'' என்றுள்.

தங்கம்மாள் என்று பெயர்கொண்ட அப்பெண்மணி, நல்ல அழகுவாய்ந்தவளென்பதுடன்கூட, தன் புருஷனிடம் மிகவும் பக்தி விசுவாசமுள்ளவள்போல் காணப்பட்டாள். அவள், தன் தமயன் பேசாமல் தன் புருஷனையே உற்றுநோக்கியவண்ணம் நிற்பதைக் கண்டதும், தாழ்ந்த குரலில்,

'' அண்ணு ! அவருக்கும் அவருடைய தந்தைக்கும் ஏதோ சண்டை நடந்தென்பதில் ஐயமில்லை—'' என்று பேசிக்கொண்டிருந்தவள், உள்ளே தன் புருஷன் உடம்பை அசைக்கவே, மேலே தாமதிக்காமல் அவனிடம் ஓடினுள்.

நிற்க, பாலகிருஷ்ணன், இத்தப்பிரமைகொண்டவன் போல் சென்று, வெளிவாசற் கதவைத் திறந்துகொண்டு,

திண்ணையில் கொஞ்சநேரம் உலாவியவண்ணமிருந்தான். அச்சமயம் சுமார் 6½ மணியிருக்கும்.

சற்று நேரத்திற்கெல்லாம், அவ்வீதியின் வழியாய், இருவர் உரத்த குரலில் உற்சாகத்துடன் பேசிக்கொண்டு வரவே, பாலகிருஷ்ணன் அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிக்கலானுன்.

ஒருவன்: – நம்மூரில் பணக்காரர் பலருடைய வள்ளலெல்லாம் இப்பொழுது வெளியில் வந்துவிடும்.

மற்றொருவன்:—அது சரிதாட்டுமையா. இந்த செட்டிப் பயலுக்கு இது நன்றாய் வேண்டும். இவன் போய்விட்டானேயென்று வருத்தப்படக்கூடியவர் ஒருவருமில்லை.

முதல்வன்:—ஆமாம் ; அவனுக்கு ஒரு பிள்ளையுண்டே.

மற்றொருவன்: உண்டையா உண்டு. இப்பொழுது அப்பையன்தான் இதைச் செய்திருக்கவேண்டுமென்று அத்தெருவில் பலர் ஜாடையாய்ச் சொல்லுகிறார்கள். அப்பையனே இப்பாபி தன் வீட்டைவிட்டு அடித்துத் துரத்திவிட்டானும். அவன் பாவம் எங்கேயோ வடக்கே பிழைத்துக்கொண்டிருந்தானும். நேற்று மறுபடியும் இங்கு வந்திருக்கிறான். நேற்று இரவு அப்பனும் பிள்ளையும் சண்டைபோட்டுக்கொண்டிருந்ததாக எல்லோரும் சொல்லுகிறார்கள்.

முதல்வன்:—அதெல்லாம் வீணையா வீண்பேச்சு. எங்கேயாவது பிள்ளை பெற்ற அப்பனைக் கொல்லுவானு ?

மற்றொருவன்:—அட போய்யா போ. எங்கேயாவது பெற்ற அப்பன் லக்ஷக்கணக்கில் பணத்தை வைத்துக்கொண்டு, தன் ஒரே பிள்ளையை அடித்துத் துரத்துவானு ? இங்கே பாரும். காலம் கலிகாலம். அப்பனுவது ? பிள்ளையாவது ?

இந்த சம்பாஷணையைக் [illegible] திருஷ்ணனுடைய தேகம் அவ[illegible] புதறவாரம்பித்தது. அவன், உடனே ஓடி, [illegible]

"ஐயா! என்ன விசேஷம்? நீங்கள் எதைப்பற்றி பேசுகிறீர்கள்?" என்று ஆவலுடன் வினவ, முதல்வன்,

"என்னப்பா! 8 நம்பர் வீதியில் அமக்களமாய் இருக்கிறதே." என்று கூறவே, பாலகிருஷ்ணன், மேலும் ஆவலுடன்,

"அங்கு நடந்த விஷயமென்ன? தயவுசெய்து சொல்லும்." என்று கெஞ்சினன். முதல்வன்,

"அப்பா! அத்தெருவில் ஒரு கொலை நடந்திருக்கிறது." என்று விடையளிக்கவே, பாலகிருஷ்ணன், திடுமாற்றத்துடன்,

"என்ன? கொலையா? யாரது?" என்று கேட்க, அம்மற்றொருவன்,

"அதான் அந்த சண்டாளன் முத்தையா செட்டி." என்று அலக்ஷியமாய் விடையளித்துவிட்டு, தன் நண்பனுடன் போய்விட்டான்.

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணன் தன் தலைமேல் இடி விழுந்தவன்போல் காணப்பட்டான். பிறகு பிசாசைக் கண்டவன்போல் தன் வீட்டிற்குள் ஓடினன்.

அச்சமயம் கோபால செட்டியார், தன் மருமகனுடைய பக்கத்தில் நின்றுகொண்டு, தங்கம்மாளுடன் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார். அவர், பாலகிருஷ்ணன் நாம் சொன்னவிதம் உள்ளே ஓடிவரும் சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு, வெளியேவர, தன் புதல்வனுடைய கலவரத்தைக் கண்டதும் பரபரப்புடன்,

"என்னடா? என்ன சமாசாரம்?" என்று வினவினார்.

பாலகிருஷ்ணன் தான் கேள்விப்பட்டதைச் சொல்லவே, அவருடைய முகமும் வெளுத்து விகாரமடைந்தது. கொஞ்ச நேரம் பேசவும் சக்தியற்று சிலைபோல் நின்றார். பிறகு,



பிரக்ஞையிருப்பதாகவே தோன்றவில்லை. அவன் இந்த நிலைமையில் இவ்விஷயத்தை யறிந்தால் ஆபத்தாய் முடியும்—" என்று அவர் மேலே பேசுமுன், அங்கு வந்து சேர்ந்த அவருடைய சம்சாரம், அவருடைய முகத்தைக் கண்டதும் பயந்தவளாய், அதற்குக் காரணம் கேட்க, கோபால செட்டியார் விஷயத்தை சுருக்கமாய்ச் சொல்லி முடித்தார். அதைக்கேட்டதும் அம்மாது வீரிட்டலறுந் தருவாயிலிருந்தாள். ஆனால் செட்டியார், அவளுடைய வாயைப் பொத்தி,

"அடியே! கூச்சலிடாதே. நாங்கள் போய் பார்த்து வருகிறோம். நாங்கள் திரும்பிவரும் வரையில் வாசுதேவனிடம் ஒன்றும் சொல்லாதே." என்று கூறிவிட்டு, தன் புத்தல்வனை இழுத்துக்கொண்டு வெளியே ஓடினர்.

அவர்களுடைய வீடு 6 நம்பர் வீதியிலும், முத்தையா செட்டியாருடைய வீடு 8 நம்பர் வீதியிலும், வழியில் அவ்வூர் பெரிய போலீஸ் ஸ்டேஷனுமிருந்ததால், கோபால செட்டியார், தன் மகனை நோக்கி,

"வா; முதலில் போலீஸ் ஸ்டேஷனில் விசாரிப்போம். நீ சொன்னது வாஸ்தவமாயிருந்தால், இதற்குள் சமாசாரம் அங்கும் எட்டியிருக்கும். நல்லவேளையாய் இன்ஸ்பெக்டர் சுப்பையர் நமக்குத் தெரிந்தவர்." என்று சொல்லிக்கொண்டே துரிதமாய் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தார். பாலகிருஷ்ணன் தன் வாயைத் திறக்க வேயில்லை. ஏற்கனவே அவனை ஒருவித பயமும் பல வித சந்தேகங்களும் சூழ்ந்துகொண்டுவிட்டன. அதற்குக் காரணம், அவன் முத்தையா செட்டியாரைக் கொலை செய்தது தன் தங்கை புருஷன் வாசுதேவனேயென்று நடுங்கினனென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இருந்தபோதிலும் வாசுதேவனுடைய நற்குணங்களையும், முத்தையா செட்டியார் அவன் விஷயத்தில் எவ்வளவு பச்சாதாபமின்றி நடந்துகொண்டபோதிலும் அவனுக்கு அவரிடமுள்ள மரியாதையையும், பிரியத்தையும், பாலகிருஷ்ணன்

நன்கறிந்தவனுகையால், தன்னைப் பெற்று வளர்த்த தகப்பனையே அவன் (வாசுதேவன்) கொல்லத்துணிவானு வென்று பலதாம் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். ஆனல் முதல் நாள் இரவு மணி 12-க்கு வாசுதேவன் வீட்டிற்கு வந்தபொழுது காணப்பட்ட அவனுடைய முக விகாரத்தையும், நெற்றியில் காயத்தையும் நினைக்கவே, மறுபடியும் பாலகிருஷ்ணனுடைய பயமும் கவலையும் அதிகரித்தன. "சரி; இதில் சந்தேகிக்க நியாயமில்லை. அப்பாபி (முத்தையா செட்டியார்) வாசுதேவனைக் கண்ணபடி திட்டி அவமானப்படுத்தியிருக்கவேண்டும். அதுவு மன்றி, அவனுடைய காயத்திலிருந்து அடித்தமிருக்கிறு னென்று தோன்றுகிறது. ஆகவே, கோபத்தில் வாசு தேவன் தன்னையும் மறந்து இக்கார்யத்தைச் செய்திருக்க வேண்டும். ஆனல் நான் நடுங்கிச் சாவதில் என்ன பிரயோஜனம்?" என்று சிந்தித்தவண்ணம் சென்றன்.

கடைசியில் அவர்களிருவரும் போலீஸ் ஸ்டேஷனை யடைந்தபொழுது, இன்ஸ்பெக்டர் சபேசய்யர் வெளியில் போகத் தயாராய் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு வயது சுமார் 25 இருக்கும். அவருடைய நேத்திரங்களிலிருந்து வெளிக்கிளம்பி வீசிக்கொண்டிருந்த ஒரு ஒளியானது, அவர் மகா சாமர்த்தியவானென்பதை எடுத்துச்சொல்லியது. இன்னும், சாதாரணமாய் போலீஸ் உத்தியோகஸ்தர்களிடம் காணப்படும் இறுமாப்பும் ஆகம்பாவமும் சிறிதுமின்றி, பார்த்ததுமே அவரிடம் நம்பிக்கையும் மரியாதையும் உண்டாகும். நாம் போலீஸ் லிலாகம் அடைந்துவிட்டோம்; நம்மைக் கண்டவுடனே எல்லோரும் நடுங்கி, கைகட்டி வாய்பொத்தி மரியாதை செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அதற்கு வேண்டிய வீண் அட்டஹாஸம் செய்யாமல், தான் ஜனங்களுடைய பாதுகாப்பின்பொருட்டு வைக்கப்பட்ட ஒரு சேவகன் என்பதை யுணர்ந்து, எல்லோரையும் மரியாதையுடன் நடத்திவந்தார். ஆகையால் போலீஸ்காரர் மட்டும் அவரிடத்தில் தைரியத்துடன் போகுமாறே

யொழிய, குற்றவாளிகளும் சாக்ஷிகளும் அவரிடமிருந்து நழுவுவது அசாத்தியம். ஒருவன் ஒருதரம் பார்த்ததுமே அவனுடைய குணதிசயங்களைக் கண்டறியும் சக்திவாய்ந்தவர். அவர் அவ்வூருக்கு வந்தபிறகு, அதுவரையில் போலீஸ்காரர்களை மடையர்களாக்கி வந்த பல சண்டாளர்கள் அவரால் பிடிக்கப்பட்டவே, அவ்வூர் ஜனங்களுக்கு அளவற்ற மரியாதைக்கும் பிரியத்துக்கும் அவர் பாத்திரரானர். நாம் சொல்லும் சமயத்திற்கு சுமார் 6 மாதகாலத்திற்குமுன், நம் கோபால செட்டியாருடைய வீட்டிலிருந்து 5000 ரூபாய் மதிப்புள்ள நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் திருட்டுப் போய்விடவே, ஞான சபேசய்யர் எளிதில் கண்டுபிடித்ததால், கோபால செட்டியார் அவரிடம் மிகவும் பக்தி விசுவாஸம் பாராட்டி வந்தார். ஆகவே, அவ்விருவருக்கும் நல்ல பரிச்சயமுண்டு. சபேசய்யரைக் கண்டதும் கோபால செட்டியார், ஆவலுடன்,

"என்ன இன்ஸ்பெக்டர்வான்! நான் கேள்விப்படும் விஷயம் வாஸ்தவந்தானு?" என்று கேட்க, சபேசய்யர்,

"வாஸ்தவமே. இப்பொழுது நான் அங்குதான் போகிறேன். நீங்களும் வருவதானுல், வாருங்கள் போவோம்," என்று சொல்ல, எல்லோரும் முத்தையா செட்டியாரின் வீட்டை நோக்கிச் சென்றனர்.

சுமார் கால்மணி நேரத்திற்கெல்லாம், அவர்கள் முத்தையா செட்டியாருடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, அங்கு வந்தனவே ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருப்பதைக் கண்டனர். சபேசய்யரைக் கண்டதும், எல்லோரும் தங்களுடைய பேச்சை நிறுத்தி மரியாதையுடன் விலகி நின்றனர். சபேசய்யர் அவ்வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த சில போலீஸ்காரர்களிடம் ஏதோ கூறி விட்டு உள்ளே நுழைந்தார்.

அத்தியாயம் 3.

முத்தையா செட்டியாரின் மரண விசாரணை மறுதினம் மே நடந்தது. அது நடந்தபொழுது அவ்விடத்தில் இருந்த ஜனக்கூட்டத்தையும் அவர்களுண்டாய சம்பாஷணைகளையும் இங்கு விவரித்து எழுதுவது முடியாத காரியம். அதற்குள் முத்தையா செட்டியாரை அவருடைய மகன் வாசுதேவனே கொலை செய்திருக்கவேண்டும் என்று பலர் தீர்மானித்துவிட்டனர். கொலை கண்டுபிடிக்கப்பட்டதும், போலீஸார் சட்டப்படி செய்யவேண்டிய சில காரியங்களைச் செய்ததானதும், சவமானது அவர்களுடைய ஜாதி ஆசாரப்படி அடக்கம் செய்யப்பட்டது. தன் தந்தை கொலை செய்யப்பட்டுவிட்டாரென்ற சமாசாரத்தை யறிந்ததும், வாசுதேவன் பட்ட அவஸ்தையை எடுத்தெழுத முடியாது. அச்சமயம் அவன் கடும் ஜ்வரத்தினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தானென்பது நம் நேயர்களறிந்த விஷயம். ஆனாலும் எப்படியோ சமாளித்துக்கொண்டு, தன் தந்தைக்குச் செய்யவேண்டிய காரியங்களை பிடிவாதத்துடனும் பக்தியுடனும் செய்துமுடித்தான். அதன் பலனாய் ஜ்வரம் அதிகரித்து, இரவு 9 மணிக்குள், சித்த சுவாதீனமின்றி கண்டபடி பேத்தவாரம்பித்துவிட்டான். எனவே, அந்த நிலைமையில் அவன் மறுதினம் மரண விசாரணைக்குப் போவது முடியாத காரியமென்று நினைத்து, கோபால செட்டியார் டாக்டர் சார்டிபிகேட்டுடன் மரண விசாரணைத் தலைவருக்கு கடிதமெழுதி யனுப்பிவிட்டார். ஆனால் ஜனங்களுக்கு இவ்விஷயம் தெரியாதாகையால், வாசுதேவனும் அன்று விசாரிக்கப்படுவானென்றும், உடனே கைதுசெய்யப்படுவானென்றும் நம்பி அக்காட்சியைக் காண மிகவும் ஆவலுடனிருந்தனர்.

மணி 11 ஆனதும், மரண விசாரணைத் தலைவர் சங்கரம் பிள்ளையும் ஜூரர்களும் வந்துசேர்ந்தனர். உடனே விசாரணை ஆரம்பமாயிற்று. முத்தையா செட்டியாரின் வீட்டு வேலைக்காரனாகிய மாரிமுத்து என்பவன் முதலில் விசாரிக்கப்பட்டான்.

மாரிமுத்து, தான் சென்ற 4 வருஷகாலமாய் முத்தையா செட்டியார் வீட்டில் வேலைசெய்துவருவதாகவும், கொலை கண்டுபிடிக்கப்பட்ட தினம் காலை வழக்கம்போல் சுமார் 5½ மணிக்கு, தான் அவ்வீட்டிற்குச் சென்ற பொழுது, வெளிவாசற் கதவு வழக்கத்துக்கு விரோதமாய் திறந்திருந்ததாகவும், பிறகு தான் உள்ளே செல்ல, முன் கூடத்தில் தரையில் முத்தையா செட்டியார் அலங்கோலமாய்க் கிடக்கவே, திடுக்கிட்டு அருகிற்சென்று பார்த்த பொழுது அவர் கொலைசெய்யப்பட்டிருப்பதைக் கண்டு, உடனே வெளியே ஓடி, சமீபத்திலிருந்த ஒரு போலீஸ்காரனிடம் தான் கண்டதைத் தெரிவித்ததாகவும் கூறினான்.

சுந்தரம் பிள்ளை:—நீ அவ்விட்டில் என்னென்ன வேலை செய்வது வழக்கம் ?

மாரிமுத்து:—செட்டியாருக்கு சாப்பாடு நானே தயார் செய்யவேண்டும். அது தவிர, நேரமிருந்தால் கடையிலுள்ள வேலைகளையும் செய்வதுண்டு.

சுந்த.—சரி ; நேற்றுமாலை செட்டியாரிடம் யார் யார் வந்தார்கள் ?

மாரிமு.—அது எனக்குத் தெரியாது. ஏனென்றால் மாலை வேளை முழுமையும் நான் உள்ளே சமையல் செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் செட்டியார் திண்ணையிலுள்ள கடையிலிருந்தார். இதைப்பற்றி கடை குமாஸ்தா கிருஷ்ணய்யரைக் கேட்டால் தெரியும்.

சுந்த.—செட்டியார் கடையை தினந்தோறும் எப்பொழுது மூடுவது வழக்கம் ?

மாரிமு.—7 மணிக்கெல்லாம் கட்டிவிடுவார்.

சுந்த.—முந்தாநாள் எப்பொழுது கட்டினார் ?

மாரிமு.—7 மணிக்குள் கட்டியாய்விட்டது.

சுந்த.—அதற்குப் பிறகு செட்டியார் என்ன செய்தார் ?

மாரிமு.—சுமார் 7½ மணிக்கு, அவருடைய மகன் வாசுதேவ செட்டியார் வந்தார். பிறகு, இருவரும் முன்கூடத்திலுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

சுந்த.—எத்தனை மணி வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள்?

மாரிமு.—அது எனக்குத் தெரியாது. ஏனென்றால் தன் மகன் வந்ததும், செட்டியார், தானே எடுத்துவைத்துக்கொண்டு சாப்பிடுவதாகவும், ஆகையால் நான் வீட்டிற்குப் போகலாமென்றும் சொல்லவே, நான் போய்விட்டேன்.

சுந்த.—ஆனால் செட்டியாருடைய மகன் எப்பொழுது அவ்வீட்டைவிட்டுப் போனானென்பது உனக்குத் தெரியாதா?

மாரிமு.—தெரியாது.

சுந்த..—செட்டியாருக்கும் அவருடைய மகனுக்கும் மனஸ்தாபமுண்டா?

மாரிமு.—செட்டியாருக்கு தன் மகனிடம் பிரியமே கிடையாது. காரணமில்லாமல் அவனைத் திட்டி ஹிம்சிப்பது வழக்கம். ஆனால் வாசுதேவ செட்டியார் மரியாதைத்தப்பாக பேசமாட்டார்.

இரண்டாவது சாக்ஷியாகிய குமாஸ்தா கிருஷ்ணய்யர், தான் சென்ற 6 மாதகாலமாகத்தான் அக்கடையில் வேலை செய்வதாகவும், தனக்கு செட்டியாருடைய குடும்ப விஷயங்கள் ஒன்றும் தெரியாதென்றும் கூறினர்.

சுந்த.—செட்டியார் தன்னிடமுள்ள பணம் நகைகள் முதலிய விலையுயர்ந்த சாமான்களை எங்கு வைப்பது வழக்கம்?

குமாஸ்தா:—அது எனக்குத் தெரியாது. செட்டியாருக்கு எல்லாரிடத்திலும் அவநம்பிக்கை அதிகம். அதனால், நான் அவ்வீட்டுத் திண்ணையிலுள்ள கடையைத் தாண்டி உள்ளே சென்றதில்லை.

சுந்த.—சரி; நேற்று உங்கள் கடைக்கு யார் யார் வந்தார்கள்?

குமாஸ்தா கிருஷ்ணய்யர் பலருடைய பெயர்களைக் கூறினர்.

சுந்த.—உமக்குத் தெரிந்து செட்டியாருக்கு விரோதிகள் யாராவதுண்டா?

குமாஸ்தா.—இக்கேள்விக்கு நான் விடையளிப்பது கஷ்டம். ஏனென்றால், செட்டியார் பலருக்கு பணம் கடன் கொடுப்பதுண்டு. அப்படி அவரிடம் கடன் வாங்கியவர்களில் அநேகமாய் எல்லோரும் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுவது வழக்கம். சாதாரணமாய் செட்டிமார்களிடம் பணம் வாங்குபவர்கள் படக்கூடிய அவஸ்தை உலகமறிந்த விஷயம். அதுவும் எங்கள் செட்டியாரிடம் மாட்டிக்கொள்ளுபவர்கள் மீளுவது துர்லபம். ஆகவே, அவரிடம் அகப்பட்டுக் கொண்ட ஒவ்வொருவரும் அவருடைய விரோதியென்றே சொல்லலாம்.

பிறகு, சில போலீஸ் சேவகர்கள் விசாரிக்கப்பட்டனம், கோபால செட்டியார் விசாரிக்கப்பட்டார். அவர், தன் மகன், முத்தையா செட்டியார் கொலைசெய்யப்பட்டு விட்டானென்ற விஷயத்தைச் சொன்னதும், தான் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் அவ்வீட்டிற்குச் சென்றதாகவும், அங்கு பிறகு கடந்த சில விஷயங்களையும் விபரமாய்க் கூறினர்.

சுந்த.—முத்தையா செட்டியாருக்கும் உமக்கும் ஏதேனும் உறவுண்டா?

கோபால.—உண்டு. அவர் என் மாப்பிள்ளையின் தகப்பனர்.

சுந்த.—உம்முடைய மாப்பிள்ளையைத் தவிர, செட்டியாருக்கு வேறு குழந்தைகளுண்டா?

கோபால.—கிடையாது.

சுந்த.—ஆனால், தற்சமயம் அவருக்குள்ள சொத்து முழுமையும் உம்முடைய மருமகனுக்குத்தானே வரும்?

கோபால.—அதை நான் சொல்லமுடியாது. ஒருக்கால் செட்டியார் தன் சொத்தை வேறு யாருக்காவது எழுதிவைத்திருக்கலாம்.

சுந்த.—ஆனல் இதுவரையில் உயில் ஒன்றும் இருப்பதாக வெளிவரவில்லையே ?

கோபால.—இல்லை.

சுந்த.—சரி ; செட்டியாருக்கும் அவருடைய மகனுக்கும் மனஸ்தாபமுண்டா ?

கோபால.—இக்கேள்விக்கு பதில் சொல்ல நான் தயாராய் இல்லை.

சுந்த.—இப்பொழுது உம்முடைய மருமகன் உம்முடைய வீட்டில்தானிருக்கிறனே ?

கோபால.—ஆம்.

சுந்த.—முந்தாநாள் இரவு அவன் என்னென்ன செய்தான் என்பது உமக்குத் தெரியுமா ?

கோபால.—தெரியாது. இரவு சுமார் 7 மணிக்கு, அவன் போய் தன் தந்தையைப் பார்த்துவிட்டுவருவதாக வெளியே சென்றான். அவ்வளவே எனக்குத் தெரியும்.

சுந்த.—சரி ; அவன் உம்முடைய வீட்டிற்குத் திரும்பி வந்தபொழுது என்ன மணி இருக்கும் ? (இக்கேள்விக்கு விடையளிக்குமுன் செட்டியார் தயங்கினர். ஒருக்கால் தன் வார்த்தையின்பலனுகவே, தன் மருமகன் மாட்டிக்கொள்ளுவானேவென்று அவர் பயந்தார். அவருடைய தடுமாற்றத்தைக் கண்ட சுந்தரம் பிள்ளை) நீர் தயங்குவது பிசகு. உள்ளதைச் சொல்லுவதே நலம்.

கோபால.—அவன் திரும்பிவந்தபொழுது நான் படுத்துக் கொண்டுவிட்டேன். ஆனல் அவன் 12 மணி சுமாருக்கு வந்ததாக என் மகன் கூறினன்.

உடனே, பாலகிருஷ்ணன் கூப்பிடப்பட்டான்.

சுந்த.—வாசுதேவன் திரும்பிவந்தது உனக்குத் தெரியுமா ?

பால.—தெரியும்.

சுந்த.—அப்பொழுது மணி என்ன ?

பால.—சுமார் 12 மணி இருக்கும்.

சுந்த.—உனக்கும் அவனுக்கும் ஏதேனும் பேச்சு நடந்ததா?

பால.—அவன் வந்ததும் தான் சாப்பிட்டாய்விட்டதென்றும், மிகவும் சிரமமாய் இருப்பதால் போய்ப் படுத்துக்கொள்ளுவதாகவும் கூறினன்.

சுந்த.—அவன் தன் தந்தையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா ?

பால.—இல்லை.

சுந்த.—சரி ; அவன், தன் தந்தையின் வீடு பக்கத்திலிருக்கும்பொழுது, உங்களுடனிருக்கச் காரணமென்ன ?

பால.—இக்கேள்வியை நீங்கள் அவனையே கேட்பது உசிதம்.

சுந்த.—நியாயம். அவன் திரும்பிவந்தபொழுது, அவனைப் பார்த்ததும், அவன் ஏதேனும் சண்டை போட்டவன் போலவாவது அல்லது அவனுடைய சரீரத்தில் காயங்களாவது காணப்பட்டனவா ?

பால.—நான் கவனிக்கவில்லை.

பிறகு முத்தையா செட்டியாரின் வீட்டுப் பக்கத்தில் வசிக்கும் இருவர் விசாரிக்கப்பட்டனர். அவ்விருவரும், கொலை நடந்தினம் இரவு சுமார் 8½ மணிக்கு, முத்தையா செட்டியார் வீட்டில் யாரோ இருவர் உரத்த குரலில் சண்டையிடும் கூச்சல் கேட்கவே, என்ன விசேஷமென்று பார்க்கும்பொருட்டு, அவ்வீட்டை யணுகி, அதன் தென்னை யின் மீதேறி ஒரு ஜன்னலின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்ததாகவும், அச்சமயம், செட்டியாரும் வாசுதேவனும் கோபத்துடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததாகவும் கூறினர்கள். அதில் ஒருவர், வாசுதேவன் தன் தந்தையைப் பார்த்து வெறுப்புடன் " நீர் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே நலம். உம்மால் உலகத்திற்கு

நீமையேயொழிய சிறிதும் நன்மையில்லை." என்று சொன்னதாகவும், இதைக் கேட்டதும் செட்டியார் பக்கத்தில் இருந்த ஒரு தடியை எடுத்து, தன் மகனுடைய மண்டையில் அடித்ததாகவும் கூறவே, அங்கிருந்த ஜனங்களெல்லோரும் வியப்பும் திகைப்புமடைந்தனர்.

சுந்த.—ஆமாம் ; நீங்கள் இருவரும், அவ்விதம் நிண்ணயில் நின்றுகொண்டு உள்ளே நடந்ததைக் கவனித்தது செட்டியாருக்காவது அவருடைய மகனுக்காவது தெரியுமா ?

சாக்ஷி.—தெரியாது. நாங்கள் மறைவிலிருந்தோம்.

சுந்த.—சரி ; அப்படி அடிதடி நடந்தும், நீங்கள் உள்ளே சென்று என் அவர்களை சமாதானம் செய்யவில்லை?

சாக்ஷி.—முதற்காரணம், அது தகப்பனுக்கும் பிள்ளைக்கும் நடந்த சண்டை. இரண்டாவது, இப்பேர்ப்பட்ட சண்டை அவ்வீட்டில் சர்வசாதாரணம். அப்பையன் பம்பாய்க்குப் போகுமுன், இவ்விதச் சச்சரவு அவ்வீட்டில் தினந்தோறும் நடப்பதுண்டு. கடைசிக்காரணம், எங்களிருவருக்கும் செட்டியாருடைய வீட்டிற்குள் நுழையவும் அவருடன் பேசவும் இஷ்டமில்லை. ஏனென்றால், அவர், முன்பின் யோசியாமல், கண்டபடி பேசிவிடுவார். ஆகையால், அநாவசியமாய் அவரிடம் அவமானப்பட நாங்கள் இஷ்டப்படவில்லை.

சுந்த.—சரி ; செட்டியார், நீர் சொன்னபடி, அடித்ததும் வாசுதேவன் என்ன செய்தான் ?

சாக்ஷி.—என்ன செய்தானென்பது எங்களுக்குத்தெரியாது. ஏனென்றால் செட்டியார் அடித்தவுடன் நாங்களிருந்த பக்கம் திரும்பவே, அவர் எங்களைப் பார்த்துவிட்டாரோமென்று பயந்து, பூனைபோல் நழுவிவிட்டோம்.

சுந்த.—ஆமாம் ; அங்கு அடிதடி நடப்பதை நீங்கள் ஏன் உடனே போலீஸாருக்குத் தெரிவிக்கவில்லை ?

சாக்ஷி.—என்ன ஐயா ! இக்காலத்தில் அநேகமாய் ஒவ்வொரு வீட்டிலும் அப்பனுக்கும் பிள்ளைக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும், புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும் அடிதடி நடக்கிறது. இதையெல்லாம் போலீஸாருக்குத் தெரிவிப்பது சாத்தியமா ?

பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யர் விசாரிக்கப்பட்டார். அவர், கொலை கண்டுபிடிக்கப்பட்டதினம் காலை சுமார் 6½ மணிக்கு, அவ்விஷயம் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், தான் உடனே செட்டியாருடைய வீட்டிற்குச் சென்றதாகவும் கூறினார்.

சுந்த.—இக்கொலையைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன ? இது தற்கொலையாய் இருக்கமுடியுமா ?

சபே.—இது தற்கொலையாய் இருக்கமுடியாதென்றே நினைக்கிறேன். ஏனென்றால் செட்டியாருடைய ஹிருதயமானது ஒரு கூர்மையான நீண்ட கத்தியினால் குத்தப்பட்டிருக்கிறது. அது தற்கொலையாயிருக்கும் பக்ஷத்தில் உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதம் சமீபத்திலேயே இருக்கவேண்டும். ஆனால் நான் அவ்வீடு முழுமையும் சோதனைசெய்தும் அப்பேர்ப்பட்ட ஆயுதம் ஒன்றும் அகப்படவில்லை.

சுந்த.—இக்கொலைக்குக் காரணம் களவா மனஸ்தாபமா ?

சபே.—அதைப்பற்றி இப்பொழுது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது.

சுந்த.—நீர் சோதனை செய்ததிலிருந்து களவு நடந்திருப்பதாய்த் தோன்றுகிறதா ?

சபே.—அதைப்பற்றியும் இப்பொழுது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஏனென்றால் முத்தையா செட்டியார் நகை வியாபாரியாகையால், அவரிடம் எப்படியும் விலையுயர்ந்த நகைகளும் பெருந்தொகை பணமும் இருக்கக்கூடும். நான் அவ்வீட்டிலிருந்த பல பெட்டிகளைச் சோதித்தும், நகைகள் ஒன்றும் அகப்படவில்லை. பணமும் சுவல்பமே இருந்தது. ஆனால் அப்பெட்டிகளில் ஒன்றிலாவது உடைக்கப்பட்டதாகவும் தோன்று

வில்லை. ஆகவே ஒன்று, அன்று அவரிடம் அதிகப் பணமாவது நகைகளாவது இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அல்லது, கொலை செய்தவனுக்கு அவை களிருக்குமிடமும், அதற்குவேண்டிய சாவிகளிருக்கு மிடமும் தெரிந்திருந்து, அவன் சிரமமின்றி கள வாடியிருக்கவேண்டும். இதுவுமன்றி, செட்டியார் பலருக்கும் பணம் கடன் கொடுப்பதுண்டென்பது வெளியாகிறது. ஆனால், பத்திரங்கள், ஒன்றும் அகப்படவில்லை. ஒரு பெட்டியில், நான் தற்சமயம் தாக்கல் செய்து இருக்கும் X அச்சிறு கடிதங்கள் இருந்தன.

உடனே, சுந்தரம் பிள்ளையும் ஜூரர்களும் அவர் கூறிய கடிதங்களைக் கவனித்தார்கள். அவைகள் மிகவும் விசித்திரமாயிருந்தன. எனென்றால் அவைகள் ஒவ்வொன் றிலும் கண்டபடி வரையப்பட்ட சில எழுத்துக்கள் காணப்பட்டன. ஆகவே அவைகளிலிருந்து ஒன்றும் விளங்க மார்க்கமில்லாமலிருந்தது.

சுந்த.—இக்கடிதங்களில் எழுதப்பட்டிருப்பது என்ன வென்று புரியவில்லையே?

சபே.—வாஸ்தவம். அவைகள் யூகாக்ஷரங்களில் எழுதப் பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை எல்லோ ராலும் வாசிக்க முடியாது. அவைகளை யார் எழுதி னார்களோ அவர்களும், அவைகள் யாருக்கு எழுதப் பட்டனவோ அவர்களுமே, விஷயத்தை அறிய முடியும்.

கந்த.—இம் மர்மத்தைக் கண்டுபிடிக்கவேண்டியது அவசிய மல்லவா?

சபே.—அவசியந்தான்.

பிறகு சவப்பரீக்ஷை செய்த டாக்டர்கள் விசாரிக்கப் பட்டனர். அவர்கள், முத்தையா செட்டியார் கொலை நடந்தினம் இரவு சுமார் 11 மணிக்குள் கொல்லப் பட்டிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். அவர்

களையும் சுந்தரம் பிள்ளை பல கேள்விகள் கேட்டார். ஆனால் அது நமக்கு அவசியமில்லையாகையால் விட்டுவிடுவோம்.

பிறகு, மேல் விசாரணை ஒருவாரம் ஒத்திப்போடப் பட்டது.

கடைசியில் கோபால செட்டியாரும் பரமகிருஷ்ண னும் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றபொழுது, அங்கு திண்ணையில் தங்கம்மாள் அவர்களுடைய வரவை மிகவும் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள். அப்பெண்மணி அவர்கள் உள்ளே நுழைந்ததும், விசாரணையில் நடந்த விஷயங்களைப்பற்றிக் கேட்க, செட்டியார் சுருக்கமாய்ச் சொல்லிமுடித்தார். இதற்குள் அவருடைய மனதிலும் வாசுதேவன் பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டுவிட்டானென்ற பயமும் சந் தேகமும் தோன்றிவிட்டதால் அவர் ஒன்றும் புரியாமல் திகைப்புற்றார். பிறகு எல்லோரும் வாசுதேவன் படுத் துக்கொண்டிருந்த அறைக்குச் சென்றனர். வாசுதேவன், செட்டியாரைக் கண்டதும், ஆவலுடன் விசாரணையைப் பற்றி வினவினான். செட்டியார் நடந்த விஷயத்தைச் சொன்னதும், அவனுடைய முகம் மேலும் வெளுத்து விகாரமடைந்தது. அவன் பேசவும் சக்தியற்று, செட்டி யாரை நோக்கியது "ஐயா! நீரும் வாஸ்தவத்தில் நான் இதைச் செய்திருப்பேனென்று நம்புகிறீரா?" என்று கேட்பதுபோலிருக்க, செட்டியார், அவனுடைய மனோநிலை மையை யூகித்தறிந்து, பிரியத்துடன் அவனுடைய கரங் களைப் பற்றிக்கொண்டு,

"அப்பா! நாங்களும் உன்னை சந்தேகிக்கிறோம் என்று நினைக்காதே. கேற்று நீ சொன்னதிலிருந்து நீ நிரபராதியென்பது நிச்சயம். ஆனாலும், இதன்பலனாய், நமக்குப் பலவித கஷ்டங்கள் ஏற்படும். அப்படி வருமே யாகில், நாங்கள் உன்னைக் கைவிடுவோமென்று பயப்படா தே. எனக்குள்ள சொத்து முழுமையும் போனாலும் பாதகமில்லை. உன்னை [illegible] என்பதைப் பூர்ணமாய் நம்பு[illegible] உறுதியாயிரு" என்று, வாசு

188781

தேவனுடைய கண்களில் நன்றியறிவும் தைர்யமும் நன்கு புலப்பட்டன. ஆனல் பேசமுடியாமல் சிரமத்துடன் பலதாம் பெருமூச்செறிந்தான். அதைக் கண்ட கோபால செட்டியார்,

"அப்பா! நீ வீணில் கவலைப்பட்டு, உன் உடம்பை மேலும் கெடுத்துக்கொள்ளாதே. நாம் தெய்வத்தை முழுமையும் நம்பியவர்கள். 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்பது வசனம்." என்று தைர்யம் சொல்லி விட்டு, தன்னறைக்குச் சென்றார். உடனே பாலகிருஷ்ணனும் வெளியே போய்விட்டான். அவ்விருவரும் சென்றபின், தங்கம்மாள், அவ்வறையின் கதவை சாத்திவிட்டு, தன் புருஷனிடம் சென்று பக்கத்திலுட்கார்ந்துகொண்டாள். வாசுதேவன் அன்புடன் அவளை உற்றுநோக்கிய வண்ணமிருந்தான். அவனுடைய நேத்திரங்களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பெருகிக்கொண்டிருந்தது. கடைசியில் அவன், தடுமாற்றத்துடன் தாழ்ந்த குரலில்,

"என் கண்மணி! நீ என்னை விவாஹம் செய்துகொண்டு அனுபவித்த சுகம் கிஞ்சித்துமில்லையே. ஐயோ! விவாஹம் ஆனதும், பிழைக்க வழியற்று, உன்னைவிட்டு வெளியூர் ஓடும்படி நேரிட்டது. கடைசியில், தெய்வானுக்ரகத்தினல், ஒரு உத்தியோகம் கிட்டியதே. இனியாகிலும், உன்னை யழைத்துச் சென்று, சுகமாய் வாழலாம் என்று மனக்கோட்டை கட்டினேனே. அம்மா உனக்கு என்மீதுள்ள பிரியத்தையும், தற்சமயம் நீ படும் கஷ்டத்தையும், நான் அறியாதவனல்ல. என் காதலி! வாரம் தவறுமல் என்னைவிட்டுப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உனக்கு ஒரு யுகம்போலிருக்கிறதென்று கடிதம் எழுதினையே. அப்படியே நான் பூர்வஜன்மத்தில் செய்த பாபங்களின் பலனுய், நானே குற்றவாளியென்று ஏற்படும்பக்ஷத்தில் உன் கதி யென்னவாகும். ஹே தெய்வமே!—" என்று கத்தத்தின் மிகுதியால் மேலே பேசச் சக்தியற்று [illegible] தேம்பித்தேம்பி அழ வாரம்பி[illegible]

"பாலவித்யா"

1931வது மேலீ பஞ்சாங்கம்.

தே	த.மீ	வார, திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன
1	கஅ	வெ சது கள-சஉ, சித்உ-ங, தி ங-ருக, சித்தாபெள, சி.
2	கக	சனி ○ கஉ-ருக, சுவா உ0-ஙசு, [தி ங-ச0, ஆகாமாவை, அ, சி.
3	உ0	ஞாயி பிர அ-சங, விசா கஅ-ஙங, [தி உஅ-உக, ஸப்தஸ்தான, ம.
4	உக	திங் துவி ரு-உஅ, அனு கள-உ0, [தி ஙக-கஅ, சி
5	உஉ	செவ் திரு ங-கஅ, கேட் கள-கங, [தி ஙஉ-ங்ச, ஸங்-சது, சி, அ.
6	உங	புத சது உ-கஅ, மூல கஅ-கள, [தி கச-கங, தி சங-கங, ம, அ.
7	உச	வியா பஞ் உ-ங, பூரா உ0-ஙஅ, தி சக-சஙசு, சி. [சி,ம]
8	உடு	வெ ஷஷ்ட் ச-கங, உத்ரா உச-கஉ, தி கச-ருசு, ஸ்மா-சிர-உப
9	உசு	சனி ஸப் ஏ-0, திரு உஅ-ருஉ, தி ஙசு-சஅ, வை-சிர-உப, சி.
10	உஎ	ஞாயி அஷ்ட 10-ரு0, அவி ங-உசு, தி ருச-உ0. ம, சி.
11	உஅ	திங் வை கரு உசு, சத ச0-ச0, தி ருஅ-உச, ம, சி.
12	உக	செவ் தெ உ0-உஉ, பூரட் ஏ-ங, சே உ-ஙஉ, அதிதி, ம அ.
13	ஙு0	புத ஏகா உரு கங, உத்ரட் ருங-உங, தி ஙங-ங்சு, ஏகா, சி, ம.
14		குரு தூவ உஙு-சரு, சே ருஙு-கசு, தி உசு-கசு, [ரிஷ்-ரவி உஎ-ஙக, சூன்யதிதி சி, அ.
15	உ	வெ நிர ஙஙு-ங்சு, அசு சு0-0, தி ருங-உஉ, பிரதோஷம்,
16	ங	சனி சது ஙசு-உஅ, அசு ச-கக, தி உசு-சச, சி. [சூ-திதி, அ.
17	ச	ஞாயி ● ஙஅ-ரு, பர அ-ஙு, ❊, தி ஙசு-உஉ, ஸர்வ-அமா,
18	ரு	திங் பிர ஙஅ-உஅ, கார் க0-சஉ, தி ருங-ஙஅ, ம, அ [கார்-உ, சி.
19	சு	செவ் துவி ஙஅ-ஙசு, ரோ கஉ-சு, தி உசு-சு, ⌣, அ, சி.
20	எ	புத திரு ங-ரு-ங்ஙு, மிரு கஉ-உ0, தி ஙங-ச, சி. [ம, அ.)
21	அ	வியா சது ஙஉ-உஉ, திரு கங-உஎ, தி ச0-உசு, மித்ரலு ரு-கங)
22	கு	வெ பஞ் உஅ-கள, புன சு-ஙஉ, தி உஅ-ஙசு, ஷஷ்-உப. சி, ம.
23	க0	சனி ஷஷ்ட் உங-உசு, பூச சு-ருங, தி ஙஎ-ரு, திதிதுவய, சி, ம.
24	கக	ஞாயி ஸப் கஎ-ருசு, ஆயி ங-ஙங, மக ருசு-கசு, தி ஙக-ங்சு,
25	கஉ	திங் அஷ்ட கஉ-கஉ, பூர் ருரு-சஙு, தி கஅ-உசு, சி. [சி, ம, சி.
26	கங	செவ் கவ சு-சு, உத்ர் ருங-ஙஎ, தி கஉ-உசு, அ, சி.
27	கச	புத தெ 0-ச, ஏகா ருச-0, ஹஸ் சஎ-ஙஅ, தி கங-கங, [ஸ்மா-ஏகா, ம, சி. [வை-ஏகா, சி, அ.
28	கரு	வியா துவா சஅ-ங்ச, சித் சச-உ, தி சு-உசு, தி ருஎ-உ0,
29	கசு	வெ நிர சஙு-சங, சுவா சக-ங. சே 0-ருச, தி ருச-ஙங,
30	கஎ	சனி சது ஙசு-ங0, விசா ங-சரு, தி சஅ-ஙங, சி. [பிரதோ, சி
31	உஅ	ஞாய ○ ஙசு-க0, அனு கள-கசு, தி ருங-கச, ம.